பதிவுஎண் 2041

தனிப்பிரதி

V P 195 ERODE

சந்தா விபரம்.	அ.
வருட சந்தா.	—0
6 மாத சந்தா.	1-12
வெளிநாடுகளுக்கு வருட சந்தா	4—0

ஆதி திராவிட சங்கங்களுக்கு பாதி சந்தாவுக்கு அனுப்பப்படும்.

முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப் படமாட்டாது.

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

ஈரோட்டினின்று ஞாயிறு தோறும் வெளி வருவது.

விளம்பர விகிதம்.	ரூ. அ
கலம் ஒன்றுக்கு வாரம் ஒன்றுக்கு	5—0
சில்லரை விளம்பரம் அங்குலம் 1க்கு	0—8

நீடித்த கால விளம்பரம் செய்வோருக்கும், பெரிய விளம்பரம் செய்வோருக்கும், பிரத்தியேக விகிதம்.

முன் பணமின்றி விளம்பரம் பிரசுரிக்கப் படமாட்டாது.

பிறப் பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமையான்—குறள்.

மறைந்த மடைமை குடிமை யிழுக்க
மிறிந்த பிறப்பாய் விடும்—குறள்.

மாலை க | குரோதன-ஹு மார்கழி-மீ உ௰-உ (3—1—26) ஞாயிற்றுக்கிழமை | மலர் ௩௩



மகாத்மா காந்திக்கு ஜே!

வந்தேமாதரம்! அல்லாஹு அக்பர்!!

திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப்பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப் பீசுகள், ஷர்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சு வேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்ப முடியாத வெளி நாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா.)

காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரி)க்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்,
ஊத்துக்குளி. (S. I. R.)

திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள், ஆர்டர்கள் 100-க்கு 25 ரூபாய் வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்) தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே. சங்காப்ப செட்டியார் கைநூல் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்று வருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—
என். கே. சங்காப்ப செட்டியார், கத்தர் ஸ்டோர்,
திருப்பூர், (தென் இந்தியா.

திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்

பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார் முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்று வருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள் காரியதரிசி கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

ஆதிதிராவிடர் கோவில் பிரவேச வழக்கு

எதிரிவிடுதலை பெற்ருர்

ஸ்ரீமான். இராஜகோபாலாச்சாரியாரின் வாதம்

திருப்பதிக்கு அருகிலுள்ள திருச்சானூர் என்னும் கோவிலுக்குள் புரசைவாக்கத்தைச்சேர்ந்த முநகேசன் என்னும் ஆதி திராவிடர் பக்திபரவசத்தினல் மெய்மறந்து பிரவேசித்து விட்ட குற்றத்துக்காகத் திருப்பதி சப் மாஜிஸ்ட்ரேட்டின முன்பு விசாரிக்கப்பட்டு 295-வது பிரிவின் கீழ் 75 ரூ. அபதாரமும் இல்லாவிடில் ஒருமாதம் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்ட விவரம் நேயர்களுக்கு நினைவிருக்கலாம். சில நண்பர்களின் உதவிகொண்டு, இவ்வழக்கில் சித்தூர் சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீமான். வி. இராமசாமி ஐயர் எம். ஏ. முன்பாக அப்பீல் செய்யப்பட்டது. அப்பீல்வழக்கு சென்றமாதம் 22௳ விசாரணை க்குவந்தது. அவ்வழக்கில் ஸ்ரீமான். ஆச்சாரியார் எதிரியின் சார்பாக மூன்று மணிநேரம் வாதம் செய்தார். ஒத்துழையாமை இயக்கத்துக்குப்பின்னர் ஸ்ரீமான். ஆச்சாரியார் நீதிமன்றத்தில் வாதம் செய்தது இதுவே முதல் முறையானபடியால், வக்கீல்களும், மற்றவர்களும் ஏராளமாகக் கூடியிருந்தனர். ஸ்ரீமான். ஆச்சாரியாரின் வாதத்தின் சாராம்சம் பின்வருமாறு:—

கீழ்க்கோர்ட்டில் சப் மாஜிஸ்ட்ரேட் எதிரி சாட்சியம் விடுவதற்குச் சந்தர்ப்பங்கொடாதது மிகவும் ஒழுங்கு தவருனது. இதனல் எதிரியின் கட்சி பெரிதும் பாதகமடைந்திருக்கிறது. பண்டித கணபதி சாஸ்திரிகள், சுவாமி சிரத்தானந்தர், மகாத்மா காந்தி இவர்களைச்சாட்சியாகப் போடுவது வழக்கைத் தாமதப்படுத்தும் நோக்கத்துடன்என்று ஸப்மாஜிஸ்ட்ரேட் கூறுகிருர். இம்மாதிரியான வழக்குகளில் நிபுணர்களின் சாட்சியங்கள் நினைத்தவுடன் கிடைக்காது. இதற்கு அவசியம் சந்தர்ப்பம் கொடுத்திருக்க வேண்டும். ஆதித்திராவிடர் ஒருவர் கோவிலுக்குள் வந்தால் சாதி ஹிந்துக்களின் மத உணர்ச்சியை அவமதித்ததாகும் என்று ஸப்மாஜிஸ்ட்ரேட் தமது உத்தரவில் குறிப்பிட்டிருப்பது, எதிரியைத்தண்டிக்க அவர் முன்னமே தீர்மானித்து விட்டார் என்பதையே காட்டுகிறது.

எதிரி கோவிலுக்குள் பிரவேசித்தபோது,குற்றம் செய்யும் நோக்கம் கொஞ்சமுமில்லை. தெய்வ ஆராதனைக்காகவே அவர் சென்ருர். மிகுந்தபக்தி. சிரத்தையுடன் அவர் அங்கு ஆண்டவனை வழிபட்டிருக்கிருர். பிராஸிகியூஷன் சாட்சியத்திலிருந்தே இது தெரிகிறது. எதிரி கோவிலுக்கு வெளியே நின்று கொண்டிருந்தார். உள்ளே பிரவேசிக்கும் எண்ணமே அவருக்கில்லை. அப்போது "கோவிந்தா கோவிந்தா" என்று கோஷித்துக் கொண்டு சில பக்தர்கள் கோவிலுக்குள் போகவே இவர் பரவசமாகி மெய்மறந்து உள்ளே பிரவேசித்து விட்டார். இவருடைய செயல் குற்றச்சட்டத்தின் கீழ்வாராது. இவரிடம் அசுத்தம் எதுவுமில்லை யென்பதையும் கவனிக்கவேண்டும். தலைமுழுகித் தூய உடைதரித்து வைதிக ஸ்ரீ வைஷ்ணவனைப்போல் துவாதச் நாமந்தரித்துக்கொண்டிருந்தார். ஆண்டவன் பக்கலில் நின்று தொழுவதைத் தவிர அவருக்கு வேறு நோக்கம் இல்லை. கோவிலுக்குள் எவ்வித அமைதி பங்கமும் விளையவில்லை.குற்றம் செய்வதற்கும் ஒருவருடைய உரிமைக்குப்பங்கம் விளைப்பதற்கும் நிரம்ப வேற்றுமையுண்டு. 295–வதுபிரிவின் முக்கிய அம்சம் என்னவெனில், எதிரியின் கோவில் பிரவேசத்தினல், ஒருவகுப்பாரின் மதம் அவதிக்கப்பட்டிருக்க வேண்டும். பின்னல் சம்ரோட்சணம் செய்ததினல் மத நிந்தனை ருசுப்படுத்தப்படவில்லை. ஒரு மனிதருடைய அல்லது சிலருடைய உணர்ச்சி பாதிக்கப்பட்டிருந்தால் மட்டும் போதாது. எதிரிக்கு எந்த மதத்தையும் அவமதிக்க வேண்டுமென்ற எண்ணம் அணுவளவும் இல்லை எனவே மதநிந்தனை என்டது இவ்வழக்கில் சிறிதும் இல்லை.

மதத்தையும், சாதியையும் ஒன்ருக ப்பாவிக்கக்கூடாது. 295-வது பிரிவுசாதி உணர்ச்சியைக்காப்பதற்காக ஏற்பட்டதன்று. இவ்வழக்கில் எந்த உணர்ச்சியேனும் பாதிக்கப்பட்டிருந்தால் அது சாதி உணர்ச்சியே யாகும். மத நிந்தனைக்கும் இதற்கும் நிரம்ப வேற்றுமை உண்டு. சாதிஉணர்ச்சியைப் பாதிப்பது குற்றச்சட்டத்தின் கீழ்வராது.

இச்சமயத்தில் மாஜிஸ்ட்ரேட் இவ்வழக்கை 297-வது பிரிவின்கீழ் கொண்டுவந்திருந்தால் பொருத்தமாயிருக்கு மென்று குறிப்பிட்டார்.இப்பிரிவு சட்ட விரோதமான பிரவேசத்தையும், மத உணர்ச்சியை அவமதிப்பதையும் பற்றியது.

ஸ்ரீமான். இராஜகோபாலாச்சாரிார் தொடர்ந்து சொன்னதாவது:—297-வது பிரிவின் கீழும் இதுவராது.எல்லாருக்கும் தெரிந்தே எதிரி உள்ளேபோனர். ஒருவரும் அவரைத்தடை செய்யவில்லை. எனவே இது சட்டவிரோதமான பிரவேசமாகாது. யாருடைய மதஉணர்ச்சியேனும்பாதிக்கப்பட்ட தென்பதற்கு இங்குச்சாட்சியம் எதுவும் விடப்படவில்லை. ருசுப்படுத்தாத வரையில் ஒருவருடைய மத உணர்ச்சியும் பாதிக்கப்பட வில்லையென்றே வைத்துக்கொள்ளவேண்டும்.

மாஜிஸ்ட்ரேட்:-இதை நானும் கவனித்தேன். பிராஸிகியூடிங் இன்ஸ்பெக்டர் இதற்குக்காரணம் சொல்லவேண்டும்.

ஆச்சாரியார்:-எப்படியானுலும் 295-வது பிரிவைவிடச் சுலபமாக 297-வது பிரிவின் கீழ் எதிரி விடுதலை பெறுவார். 295-வது பிரிவின் கீழ் தண்டனை விதிக்க வேண்டுமென்று மத நிந்தனை செய்யப்பட்டிருக்கவேண்டும். எதிரிக்கு இந்த நோக்கமேயில்லை. அவர் தெய்வ ஆராதனை செய்ய வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் சென்ருர். மைசூர் சமஸ்தானத்தில் மேலைக்கோட்டைக் கோவிலில் வருஷத்தில் சில தினங்களில் பஞ்சமர்கள் உள்ளே விடப்படுகிருர்கள்.

மாஜிஸ்ட்ரேட்:—மன்ஞர்குடி ரதோற்சவத்திலும் இவ்வாறு நடக்கிறது.

ஆச்சாரியார்;—பஞ்சமர் கோவிலில் பிரவேசிப்பதே மதநிந்தனையானல் இவ்வாறு சில குறிப்பிட்ட தினங்களில் மத நிந்தனை செய்யலாமென விதிசெய்திருக்கமாட்டார்கள். குற்றச்சட்டத்தின் கீழ் வரக்கூடியசெயல்கள் குற்றம் செய்யும் நோக்கத்துடன் செய்யப்பட்ட குறிப்பிட்ட செயல்களாயிருக்க வேண்டும். ஒருமனிதன் ஒருசாதியிற் பிறந்ததினுலும் ஓர் இடத்தில் இருந்ததனுலுமே அவனைத் தண்டிக்கக்கூடாது. கிரிமினல் கோர்ட்டுகளை தீண்டாமைத் தத்துவத்தை நடத்தி வைப்பதற்காக உபயோகித்தல் சரியன்று. என்னுடைய கடைசி வாதம் இது. எதிரிபரவசத்தினல் மெய்மறந்து போகவில்லை யென்றும், கோவிலுக்குள் பிரவேசிக்கத் தனக்குள்ள உரிமையை நாட்டுவதற்கே போனதாகவும் வைத்துக் கொள்வோம். அப்போதும் இது குற்றச்சட்டத்தின் கீழ் வராது. உதாரணமாக ஒருவன் ஒரு பொருளைத் தன்னுடையது என்று உரிமை கொண்டாடி எடுத்துக்கொண்டால், அவனைத்திருட்டுச் சட்டத்தின் கீழ் தண்டிக்க முடியாது. எதிரி தாம் ஒரு ஹிந்து என உண்மையில் நினைக்கிருர். ஹிந்து கோவிலில் ஆராதனை செய்யத் தமக்கு உரிமை உண்டென எண்ணுகிருர். செல்வாக்குள்ள சாதி ஹிந்துக்கள், பலர் அவருடைய உரிமையைஆதரிக்கிருர்கள். அவர் அமைதி முறையிலேயே தமது உரிமையை வற்புறுத்துகிருர். அவரை வெளியே விட்டுக்கதவைச்சாத்திவிடலாம். அப்படியும் அவர் உள்ளே புகுந்தால் நஷ்ட ஈடு வாங்கலாம். ஆனல் அவர் மதநிந்தனை செய்ததாக மட்டும் ஏற்படாது. தீண்டாதாரின் உரிமைகளை ஆதரித்து மகாத்மா காந்தியும், காங்கிரஸும் செய்து வரும் கிளர்ச்சியையும், தீண்டாதாருக்குள் ஏற்பட்டிருக்கும் உணர்ச்சியையும், சாதி ஹிந்துக்கள் பலர் அவர்கள் உரிமையை அங்கீகரித்திருப்பதையும் கவனித்தால், எதிரியின் செயலை மத நிந்தனையென்று சொல்ல முடியாது. தீண்டாமை விலக்குக்கு விரோதமாக இந்தச்சட்டத்தைப் பிரயோகிக்க முடியுமாவென்ற விஷயத்தைக் கோர்ட்டார் முடிவுசெய்துவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பின்னர் பிராஸிகியூடிங் இன்ஸ்பெக்டர் தண்டனைக்குச் சாதகமாக வாதம் செய்தார். மாஜிஸ்டிரேட்டுக்குச்சந்தேகமிருந்தால் 297-வது பிரிவின் கீழ் வழக்கை மாற்றிவிடலாமென்று குறிப்பிட்டார். ஸ்ரீமான். ஆச்சாரியார் வழக்கை மீண்டும் விசாரணைக்குக் கொண்டுவர எவ்வித முகாந்தரமுமில்லையென்று கூறினர்.

இத்துடன் வாதம் முடிவடைந்தது. மறுநாள் மாஜிஸ்டிரேட் தீர்ப்புக் கூறினர். மதநிந்தனை செய்யப்பட்டதாக நிரூபிக்கப்படவில்லையென்று அபிப்பிராயப்பட்டுத் தண்டனையை ரத்து செய்து எதிரியை விடுதலை செய்தார்.

நவசக்தி.

ஸ்ரீமான். இராஜ கோபாலாச்சாரியார்

ஸ்ரீமான். இராஜகோபாலாச்சாரியார், வெளியிட்ட அறிக்கைகளில், முதலில் காங்கிரஸ் தற்காலம் பொது ஜனங்களுக்குச் சேவை செய்ய எவ்வித திட்டத்தையும் உடைத்தாயிருக்கவில்லை என்றும், காங்கிரசிற்கு இப்போதிருக்கும் மதிப்பெல்லாம், அது சென்ற நான்கு, ஐந்து வருடங்களாக தேசத்துக்கு அநுகூலமான திட்டங்களை ஏற்படுத்திக் கொண்டு, அதற்காகப் பல தலைவர்களும், தொண்டர்களும், கஷ்டங்களையும், நஷ்டங்களையும் ஏற்றுக் கொண்டு பெரிய தியாகங்களையும் செய்து திட்டங்களை நிறைவேற்றப் பிரயத்தனப்பட்டதன் பலனாய், காங்கிரசுக்கு ஏற்பட்ட மதிப்பை வைத்துக் கொண்டு, காங்கிரசின் மூலமாய் பொது ஜனங்களுக்கு நன்மையுண்டாகும்படியான எவ்வித திட்டமும் அதில் இல்லாமல், பழைய நிலையின் வாசனையையே ஆதாரமாக வைத்துக் கொண்டு, காங்கிரஸ், காங்கிரசென்று சிலர் சொல்லிவருகிறார்கள், இப்படியே காங்கிரஸ் இருக்குமேயானால், இனிக் கொஞ்சக் காலத்தில் காங்கிரஸ் மதிப்பே போய் விடுமென்றும், எழுதிவிட்டு காங்கிரசிற்கு பூரண மது விலக்கையாவது திட்டமாய் வைத்து அதை ஓட்டர்களுக்கு எடுத்துச் சொல்லி, ஓட்டுப் பெற்று சட்டசபைக்குப்போய் ஒரே வருடத்தில் மதுபானத்தை நிறுத்திவிடவேண்டுமென்றும் எழுதியிருந்தார். இது எழுதின சமயம், ஒத்துழையாதாருங்கூட இந்த தத்துவத்தோடு சட்டசபைக்குப்போய் வேலை செய்ய வேண்டுமென்பது தான் அவருடைய கருத்தாயிருந்தது. எப்படியெனில், இதைப்பற்றி, நம்மிடம் யோசிக்கையில், தானும், சட்டசபைக்குப்போவதில் ஆக்ஷேபணையில்லையென்றும், இன்னும் பல இடங்களுக்கு ஒத்துழையாதார்களையே நிறுத்தவேண்டுமென்றும் சொல்லி, அவர்களுடைய பெயர்களையும் சொன்னார். அதன் பிறகு எழுதிய ஒரு வியாசத்தில், "முட்டுக்கட்டைபோட்டு அரசாங்கத்தை ஸ்தம்பிக்கச் செய்யும் பேச்சு இனி உதவாது, நாம் ஒரே நோக்கத்துடன், திடபுத்தியுடன் உழைத்தோமானால், மதுவிலக்கைச் செய்து முடிக்ககலாம், அடுத்த தேர்தல்களை, இந்த மதுவிலக்கு என்னும் ஒரே விஷயத்தின்மேல் நடத்துங்கள், சட்டசபைகளில் தற்போது, ஏழைகளுக்கு வேறு என்ன நல்ல தொண்டு செய்யமுடியும்" என்றும், "மதுவிலக்கைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ளாவிட்டால், அரசாங்க வேலை முற்றிலும் தடைசெய்வது நியாயமாகும்; சென்னை சட்டசபையைப் பொறுத்தவரையில், சுயராஜ்யகக்ஷியின் எதிர்ப்புத் திட்டம் காங்கிதமளவாகவே இருக்கிறது என்று" சுயராஜ்யக்கக்ஷியினருக்கும், மற்றும் தேசியவாதிகளுக்கும் புத்தி சொல்லுவது போல் ஒரு வியாசமும், சமாதானமும் எழுதியிருக்கிறார்.

பிறகு சித்தூரில் 22-12-25-ல் நடைபெற்ற ஓர் பொதுக் கூட்டத்தில், "சுயராஜ்யக்கக்ஷியார், முட்டுக்கட்டை போட வேண்டுமென்று சட்ட சபைக்குப் போனவர்கள் முட்டுக் கட்டை போட்டார்களா? அவர்களால் போட முடியுமா? முட்டுக்கட்டை போடுவதற்கு அங்கு ஏதாவது இடமிருக்கிறதா? ஆதலால், நாம் எல்லாரும் ஒன்று சேர்ந்து வேலை செய்யக்கூடிய திட்டத்தைக் கண்டு பிடிக்கவேண்டும். அதற்கு மதுவிலக்குத்திட்டம் பொருத்தமானதென்றும், எல்லாருக்கும் பொதுவானதென்றும், நினைக்கிறேன். இதற்குக் கவர்ன்மெண்டு முட்டுக்கட்டை போடுமானால், கவர்ன்மெண்டு நடைபெறாமல், முட்டுக் கட்டைபோட இந்தத்திட்டம் உதவும்; ஆதலால், ஜனங்கள் இந்த மதுவிலக்குக்கு சாதகமானவர்களையே சட்ட சபைக்கு அநுப்பினால் கவர்ன்மெண்டு நடை பெறாமல் முட்டுக் கட்டை போட சாதகமாயிருக்கும். இது தான் பரஸ்பர ஒத்துழைப்புக்குச் சாதகமாயிருக்கும்" என்று பேசியிருக்கிறார்.

பிறகு சேலத்தில் டிசம்பர் மாதம் 24-ந்தேதி நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியிருப்பதாவது:—

"இது வரையிலும், கதர், கள்ளு என்ற பல விஷயங்கள் பேசப்பட்டு வந்தன; இனி மது விலக்கும், சட்டசபைத் தேர்தலும் மாத்திரம் தான் பேசப்படும் என்று சொல்லிவிட்டு, தான் மாறுதல் வேண்டாத கக்ஷியைச் சேர்ந்தவனென்றும், சட்ட சபைப் பகிஷ்காரத்தில் நம்பிக்கையுடையவனென்றும், சட்ட சபைக்குப் போக விருப்பமில்லாதவர்களைப் போகும்படியும், வோட்செய்யும்படியும் பலவந்தப் படுத்துவதில்லையென்றும், சட்ட சபைக்குப் போகிறவர்கள், மது விலக்கைக் கட்டாயமாக வலியுறுத்த வேண்டுமென்றும், அப்படி வலியுறுத்தினால், கவர்ன்மெண்டுக்கு முட்டுக்கட்டை ஏற்படுமென்றும், ஆகையால் இம்மாதிரி சட்டசபையில் அடுத்த முறை, மது விலக்கைப் பூர்த்தியாய் வேலை செய்கிறவர்களுக்கே, வோட் கொடுக்க வேண்டுமென்றும், மதம், ஜாதி, வகுப்பு, குல, அபிமானம் இவைகளைக் கருதி வோட்டர்கள் வோட் ;செய்யக்கூடாது, என்று நான் வோட்டர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றும் பேசியிருக்கிறார்.

அதோடல்லாமல், இதையே தான் ஓர் பிரசாரமாகக் கொண்டிருப்பதாகவும், ஆங்காங்கு போய்ப் பிரசாரம் செய்யப் போவதாகவும் சொல்லியிருக்கிறார்.

மேல் கண்ட இரண்டு வியாசங்கள், இரண்டு உபந்யாசங்கள் ஆக நான்கு சந்தர்ப்பத்திலும், ஸ்ரீமான். ஆச்சாரியாரின் அபிப்ராயங்கள் ஒன்றுக்கொன்று எவ்வளவு மாறுபட்டிருக்கின்றது என்பதை ஊன்றிக்கவனிப்பவர்களுக்கு, இதில் ஏதோ ஓர் இரகசியமிருக்கிறதென்பது நன்றாய் வெளிப்படும். முதலில், காங்கிரசிற்கு ஓர் யோக்கியதை உண்டாவதற்காக ஓர் திட்டம் வேண்டுமென்று ஆரம்பித்து, பூரண மதுவிலக்கைக் காங்கிரசில் ஓர் திட்டமாக வைத்து, சட்டசபைக்குப் போய், ஒரே வருடத்தில் மதுபானத்தை நிறுத்திவிடவேண்டுமென்று எழுதினார். அது சமயம் சட்டசபையில் தனக்கு ஒரு நம்பிக்கையும், சட்டசபையின் மூலமாய் மது விலக்கை நிறுத்தி விடலாமென்கிற உறுதியும் அவருக்கு இருந்திருக்கிறது. அடுத்தாற்போல், சட்டசபையின் மூலம் கவர்ன்மெண்டு நடக்காமல் முட்டுக்கட்டைபோட முடியாதென்று சொல்லி விட்டு, மறுபடியும், நமது திட்டத்தைச் சர்க்கார் ஏற்றுக் கொள்ளாவிட்டால், முட்டுக் கட்டை போடலாமென்று சொல்லுகிறார். மறுபடியும், தான் மாறுதல் வேண்டாதவனென்றும், சட்டசபைக்குப் போவதிலும், வோட் கொடுப்பதிலும் நம்பிக்கையில்லையென்றும், போகிறதற்கு இஷ்டப்படுகிறவர் இப்படி நடங்களென்றும், ஜாதி, மத, வகுப்பு வித்தியாசங்களைக் கவனிக்காமல் வோட் கொடுங்களென்றும், சொல்லி விட்டு, தான் அதைப் பற்றிப் பிரசாரம்செய்யப் போவதாகவும் சொல்லுகிறார்.

காஞ்சியில், பாட்னாத் தீர்மானத்தை, சுயராஜ்யக்கக்ஷியார் சொன்னபடி நடக்கவில்லை, சட்டசபைக்குப் போவதில் பிரயோஜனமுமில்லை, என்று ஸ்ரீமான். ஈ. வெ இராமசாமி நாயக்கர் எதிர்த்தபோது, அவ்வெதிர்ப்புக்கு விரோதமாய் ஸ்ரீமான். இராஜகோபாலாச்சாரியார், முதல்பாகத்தை ஆதரிக்கையில் சட்டசபையில் நம்பிக்கையில்லாதவர்கள், நம்பிக்கையுடன் சட்டசபைக்குச் சென்று வேலை செய்பவர்களை, என்ன கூற வேண்டும்? என்று சொல்லி விட்டு, அதற்கு ஓர் உதாரணமும் சொல்லிக் காட்டினார். அதாவது, மாமிசம்சாப்பிடக் கூடாது என்று, ஒரு சங்கம் ஏற்படுத்திக்கொள்ளுவதாய் வைத்துக் கொள்ளுவோம்; அச்சங்கத்தில் இருந்த சிலர் நாங்கள் சாப்பிட்டுத்தான் தீருவோம்; என்று சொல்லி சங்கத்தின் அநுமதி பெற்று விட்டால், அச்சங்கத்திலிருப்பவர்களுக்கு போனவர்களைப்பார்த்து இந்தமாதிரி ஏன் குழம்பு வைத்துச் சாப்பிடவில்லை? ஏன் பொறியல் வைத்துச் சாப்பிடவில்லை?; என்று கேட்க என்ன அதிகாரமிருக்கிறதென்று சொல்லியும், அவர்கள் இஷ்டம்போல் விட்டுவிடவேண்டுமென்றும் பேசி தீர்மானத்தின், முதல் பாகத்தை ஆதரித்தார். அப்படியிருக்க, இப்பொழுது சுயராஜ்யக்கக்ஷியாருக்கு, அவர்கள் ஜனங்களை எப்படி ஏமாற்ற முடியுமென்பதற்கு யோசனை, சொல்லிக்கொடுப்பது போல், மதுபானதிட்டத்தை அதில் சேர்த்துக்கொள்ளுங்கள்; இப்படிச் சொன்னால், ஜனங்களிடம் வோட்டும் பெற்றுக்கொள்ளலாம்; சட்டசபைக்குப்போய், அப்படிச்செய்யலாம், இப்படிச்செய்யலாமென்று, தனக்கு நம்பிக்கையில்லாத விஷயங்களை, அவர்கள் நம்பும்படி சொல்லுகிறார்,

அது மாத்திரமல்லாமல், வோட்டர்களையும், ஜாதி, மத, வகுப்புப்பார்த்து வோட் செய்யக் கூடாது; உங்களுக்கு அநுகூலமான காரியத்தைச்செய்வதாக யார் வாக்குக் கொடுக்கிறார்களோ, அவர்களுக்கே வோட் செய்ய வேண்டுமென்றும் சொல்லுகிறார். சட்டசபையில் ஒரு காரியமும் செய்யமுடியாதென்று நினைக்கிற ஒருவர், இன்னின்ன காரியங்கள் செய்வதாக யார் வாக்குக்கொடுக்கிறார்களோ, அவர்களுக்கே வோட் செ

ய்யவேண்டுமென்றும் சொல்லுகிருர். சட்டசபையில் ஒரு காரியமும் செய்யமுடியாதென்று, நினைக்கிற ஒருவர், இன்னின்ன காரியங்கள் செய்வதாக வாக்குக்கொடுக்கிறவருக்கு வோட்கொடுங்கள் என்று சொல்வதானது, எவர் பெரிய புரட்டுக்காரரோ அவருக்கு வோட் கொடுங்கள் என்று சொல்வது தானே கருத்தென்று எண்ணவேண்டும். சுயராஜ்யக்கக்ஷியார் சொன்னபடி நடக்கவுமில்லை; சொன்னபடி நடக்கவும் முடியாது; என்றும் சொல்லிவிட்டு இன்னின்ன மாதிரி சொல்லிப் போய் வோட் கேளுங்கள்; என்று சொல்வதனுலும். ஜாதி, வகுப்பு, மதவித்தியாசங்களில்லாமல் வோட் கொடுங்கள் என்று சொல்லுவதினுலும், ஒத்துழையாதார் எல்லாம் சட்டசபைக்குப் போகவேண்டுமென்று நினைத்ததினுலும், அடுத்த தேர்தலில் முன் போலவே, பிராமணரல்லாதார்களுக்கு சட்டசபையில் ஆதிக்கம் வந்துவிடுமோவென்று பயப்படுவதாயும், அதற்கு ஏதோ சில வழிகள் கண்டுபிடிப்பதாகவுந்தான் இதிலிருந்து நாம் யூகிக்க வேண்டியிருக்கிறதேயல்லாமல், வேறு ஒன்றும் நினைப்பதற்கிடமில்லை. ஆதலால், வோட்டர்கள், இந்த சட்டசபையானது, தேசத்திற்கு எவ்விதத்திலும், நன்மை செய்யமுடியாது என்பதை நன்ருய் உணரவேண்டும்.

சர்க்காருக்கு விரோதமில்லாமல், வகுப்பு நன்மைகளை உத்தேசித்து, ஏதாவது செய்துகொள்ளவேண்டுமானுல், அவைகளுக்கு மாத்திரம் கொஞ்சம் சட்டசபை உதவும். இவ்விதமாகத்தான் அவைகள் ஆக்கப்பட்டுமிருக்கின்றன. அப்பேர்ப்பட்ட காரியங்களில் முக்கிய கருத்துடையவர்கள், அந்தந்த வகுப்பார்களையும், அந்தந்த வகுப்புக்கு நன்மையான கொள்கையுடையவர்களையும், சட்டசபைக்கு அநுப்பவேண்டுமேயல்லாமல், செய்யமுடியாத ஓர் காரியத்தை உத்தேசித்து, செய்யக்கூடிய காரியங்களை அலக்ஷியம்செய்து வகுப்பு வித்தியாசமில்லாமல், சட்டசபையை நிரப்பிவிடுவோமேயானுல், கஷ்டப்படும் வகுப்பாரும், தாழ்த்தப்பட்டவகுப்பாரும், பிற்பட்டவகுப்பாரும், இன்னும் அதிகக் கஷ்டப்படவும், தாழ்த்தப்படவும், பிற்படவும் தான் முடியுமென்பதை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்.

ஆதலால் சட்டசபை முதலிய தேர்தல்களில் கலந்து கொள்ள வேண்டுமென்கிற ஆசையிருக்கிறவர்கள், கண்டிப்பாய் தங்கள் வகுப்பு நன்மையை மறந்துவிடக்கூடாதென்று நாம் எச்சரிக்கை செய்கிரும்.

கான்பூர் காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

பண்டித மோட்டிலால் நேருவின் தீர்மானம் கடைசிவரையில் திருத்தப்பட்டு வந்து முடிவாக அங்கீகரிக்கப்பட்டது.

அதுவருமாறு:—

1. சென்ற செப்டம்பர் மாதம் 22, 23-ந் தேதிகளில் பாடலிபுரத்தில் அகிலஇந்திய காங்கிரஸ் கமிட்டியார் நிறைவேற்றி வைத்த தீர்மானத்தின் (பி) உட்பிரிவை இந்தக்காங்கிரஸ் ஊர்ஜிதம் செய்கிறது. தேச க்ஷேமத்திற்கு அவசியமான எல்லா ராஜீய வேலைகளையும், இனிகாங்கிரஸே ஏற்றுக்கொண்டு செய்யவேண்டுமென்றும், அதற்காகக் காங்கிரஸ் ஸ்தாபனங்களையும், மேலேகண்ட தீர்மானத்தில் அகில இந்திய நூற்பவர் சங்கத்திற்குச் சொந்தமானதென்றும், ஒதுக்கி வைத்திருப்பதாகவாவது அல்லாது வேறு காரியங்களுக்காக ஒதுக்கி வைத்திருப்பதாகவாவது இல்லாத காங்கிரஸ் நிதிகளையும் உபயோகித்துக்கொள்ள வேண்டும் என இந்தக்காங்கிரஸ் தீர்மானிக்கிறது.

2. தேசியக் கோரிக்கையை நிறைவேற்றி வைத்துக் கொள்ளவும், தேசத்தின் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் சாத்வீக சட்ட மறுப்பே கடைசியாக உபயோகப் படக்கூடிய திறமையான ஆயுதமென்று இந்தக் காங்கிரஸ் கருதி, அதில் தனது பூரண நம்பிக்கையைத் தெரிவித்து கொள்ளுகிறது. ஆயினும், அந்த ஆயுதத்தைக் கைக்கொள்ள இப்பொழுது தேசம் தயாராக இருந்து வராததை உத்தேசித்து, தேசமானது கிரமமான வழிகளால் அடைந்துவரும்படி செய்யவும், சுயராஜ்ய பாட்டையில் கவர்ன்மெண்டாராவது, இதரர்களாவது போட்டு வரும் முட்டுக் கட்டைகளை எதிர்த்து நிற்கவும் செய்து வரும் எல்லா வேலைகளிலும் தன் நம்பிக்கையையே அடிப்படையான தர்மமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் தீர்மானிக்கிறது.

3. இதைத் தழுவி அடியிற் கண்ட ராஜீய வேலைத் திட்டத்தை இந்தக் காங்கிரஸ் அங்கீகாரம் செய்கிறது,

(அ) மகா ஜனங்களுடைய உரிமைகளை அவர்களுக்குப் போதித்து, அந்த உரிமைகளைப் பெறுவதற்கு அவர்களுக்கு வேண்டிய பலத்தையும் எதிர்ப்பு சக்தியையும், அவர்கள் அடைவதற்காகக் கைராட்டினத்தையும், கதரையும் பிரபல்யப் படுத்துதல், பல வகுப்புகளுக்குள்ளும் ஒற்றுமையை வளர்த்தல், தீண்டாமையைப் போக்குதல், தாழ்ந்த வகுப்பினர்களை முன்னுக்குக் கொண்டு வருதல், குடியை ஒழித்தல் ஆகியவைகள் உள்ளிட்ட நிர்மாணத்திட்டத்தை அவர்கள் நிறைவேற்றி வைக்கச் செய்வதன் மூலமாக அவர்களைத் தகுதிப்படுத்த செய்ய வேண்டும். அதனுடன் கிராம நிர்மாணவேலை, தேசிய முறையில் கல்வி பயிற்றுவித்தல், ஆலை விவசாயத் தொழிலாளர் சங்கங்களை அமைத்தல், ஆலைக்காரர்களுக்கும், ஆலைத் தொழிலாளருக்கும், நிலச்சுவான் தார்களுக்கும், குடிகளுக்கும் அன்யோன்யபாவத்தைக் உண்டுபண்ணுதல், கல்விப்பொருளாதாரம், தொழில், வர்த்தகம் முதலிய துறைகளில் அபிவிருத்தி ஏற்படுத்தல், ஆகிய காரியங்களையும் அந்தத் திட்டம் அடக்கிக்கொண்டிருக்கவேண்டும்.

(ஆ) வெளிநாடுகளில் இந்தியாவைப்பற்றிய உண்மையான விவரங்களை அறிவித்து வரவேண்டும்.

3. சென்ற 1924-ம் வருடம் பிப்ரவரி மாதம் 18-ந்தேதி தீர்மானமூலமாக இந்தியா சட்டசபையிலுள்ள சுயராஜ்யக் கட்சியினரும், சுயேச்சைக் கட்சியினரும், கவர்ன்மெண்டாருக்கு அறிவித்திருக்கும் ராஜி நிபந்தனைகளை தேசத்தின் சார்பாக இந்தக் காங்கிரஸ் ஒப்புக்கொள்ளுகிறது. ஆயினும், அதற்கு நாளதுவரையில கவர்ன்மெண்டார் திருப்திகரமான பதில் அளிக்காததை உத்தேசித்து, இந்தியா சட்டசபையிலுள்ள சுயராஜ்யக்கட்சியினர் அடியிற்கண்ட நடபடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தக்காங்கிரஸ் தீர்மானிக்கிறது.

(அ) மேலே கண்ட ராஜி நிபந்தனைகளுக்குக் கூடிய சிக்கிரத்தில் பதில் அளிக்கும்படி இந்தியா சட்ட சபையிலுள்ள சுயராஜ்யக் கட்சியினர் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்ளவேண்டும். பிப்ரவரி மாதக்கடைசிக்குள் கவர்ன்மெண்டார் பதிலளிக்காவிட்டாலும், அவர்கள் அளிக்கும் பதிலானது திருப்திகரமாக இருக்கவில்லையென்று காங்கிரஸ் காரியக்கமிட்டியாரும், அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியாரால் நியமிக்கப்படும் அங்கத்தினர்களும் அடங்கிய ஸ்பெஷல் கமிட்டியார் அபிப்ராயப்பட்டாலும், இந்தியா சட்ட சபையிலுள்ள சுயராஜ்யக் கட்சியினர் கிரமமான முறையில் முன்போல் இந்தியா சட்ட சபையிலிருந்து வேலை செய்து வர முடியாதென்று இந்தியா சட்ட சபையிலேயே கவர்ன்மெண்டாருக்கு அறிவித்து விடவேண்டும்.

(ஆ) இந்தியா சட்டசபையிலும், ராஜாங்க சபையிலுமுள்ள சுயராஜ்யக் கட்சி அங்கத்தினர்கள் வரிமசோதாவை நிராகரிக்க ஓட் செய்துவிட்டு, உடனே சட்டசபைகளை விட்டு வெளியே வந்து விடவேண்டும். அந்தக் காலத்தில் கூடியிருக்கும், மாகாண சட்ட சபைகளிலுள்ள, சுயராஜ்யக் கட்சியினரும், தங்களுடைய ஸ்தானங்களைக்காலி செய்து விட்டு வெளியே வந்து விட வேண்டும். அவ்விதம் வெளியே வந்து விடும் அங்கத்தினர்கள் அவ்விவரத்தை மேலே குறிப்பிட்ட ஸ்பெஷல் கமிட்டியாருக்கு அறிவித்து, அவர்களுடைய ஆக்ஞையை எதிர் பார்த்திருக்கவேண்டும். அந்தக் காலத்தில் கூடியிருந்த மாகாண சட்ட சபைகளிலுள்ள அங்கத்தினர்கள் அதற்குப் பிறகு நடைபெறும் கூட்டங்களுக்குப்போகாமல் ஒதுங்கியிருந்து, அவ்விவரத்தை மேலே கண்ட கமிட்டியாருக்கு அறிவித்துக் கொள்ள வேண்டும். அவர்கள் தங்களுடைய ஸ்தானங்கள் காலியாகி விடாமலிருப்பதற்காகவாவது அல்லது மாகாண வரவு செலவு திட்டத்தை நிராகரிப்பதற்கோ அல்லது புதிய வரி மசோதாவை எதிர்ப்பதற்கோவாவதன்றி, சட்டசபைகளுக்காவது, சட்ட சபைக்கமிட்டிகளுக்காவது செல்லக்கூடாது. ஆனுல், அவ்விதம் சட்டசபை ஸ்தானங்களைவிட்டு வெளியே வந்துவிட வேண்டுமென்று கட்டளையிடப்படும் வரையில் பல சட்ட

சபைகளிலுமுள்ள சுயராஜ்யக் கட்சியினர் சுயராஜ்யக் கட்சியின் தற்கால விதிகளுக்குட்பட்டு அவரவர்களுடைய சட்டசபைகளில் வேலைசெய்து வரலாம். எதிர்பாராத எவ் விஷயமேனும் சட்ட சபைகளில் கொண்டு வரப்படவிருப்பதை உத்தேசித்து அவர்கள் சட்டசபைகளுக்குச் செல்லவேண்டியது அவசியமென்று ஸ்பெஷல் கமிட்டியார் கருதினால், அவர்கள் அந்தக் காரியத்திற்காக சட்ட சபைகளுக்குச் செல்ல அனுமதிக்கலாம்.

(இ) முதலாவது உட்பிரிவில் கண்ட யாதாஸ்துக்கள் கிடைத்ததும் தேசமெங்கும் காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சி ஸ்தாபனங்கள் ஒற்றுமையாகச் செய்ய வேண்டிய வேலைகளை நிர்ணயிப்பதற்காக மேற் கண்ட ஸ்பெஷல் கமிட்டியார் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தைக் கூட்டிவைக்க வேண்டும். அவ்விதம் நிர்ணயிக்கப்படும் வேலைத்திட்டமானது மேலே கண்ட 1 2. பிரிவுகளிலுள்ள வேலைகளில் சிலவற்றையும், இத்தீர்மானத்தில் குறிப்பிட்ட கொள்கையை ஜனங்களுக்குப் பிரசாரம் செய்வதையும் அடக்கிக்கொண்டிருப்பதுடன், எவ்விதம் அடுத்த தேர்தலை காங்கிரசின் சார்பாகவும், காங்கிரசின் பெயராலும் நடத்தி வைக்கவேண்டுமென்றும்; எந்தெந்த கொள்கைகளை அஸ்திவாரமாக வைத்துக் கொண்டு காங்கிரஸ் வாதிகள் அபேக்ஷகர்களாகத் தேர்தலில் நிற்கவேண்டுமென்றும் குறிப்பிடவேண்டும்.

ஆனால் மேலே கண்ட ராஜி நிபந்தனைக்குக் கவர்ன்மெண்டார் திருப்திகரமான பதில் அளித்திருப்பதாகக் காங்கிரஸ் கருதினாலன்றி கவர்ன்மெண்டார் தயவில் கிடைக்கக்கூடிய உத்தியோகங்களை ஏற்றுக்கொள்ளக்கூடாதென்பது அடிப்படையான தர்மமாக இருக்க வேண்டும்.

(ஈ) அந்தந்த மாகாண காங்கிரஸ் கமிட்டிகள், அந்தந்த மாகாண சட்டசபைகளுக்கும், அந்தந்த மாகாணத்திற்காக இந்தியா சட்டசபையில் ஏற்பட்டிருக்கும் ஸ்தானங்களுக்கும் அபேக்ஷகர்களாக நிறுத்தவேண்டியவர்களைக் கூடிய சீக்கிரத்தில் தெரிந்தெடுக்க இந்தக் காங்கிரஸ் அனுமதி கொடுக்கிறது.

(உ) மேலே கண்ட ராஜி நிபந்தனைக்குக் கவர்ன்மெண்டார் அளிக்கும் பதிலானது, திருப்திகரமானதென்றும், அங்கீகரிக்கப்படத்தக்கதென்றும், மேலே கண்ட ஸ்பெஷல் கமிட்டியார் அபிப்பிராயப்படின் அந்த அபிப்பிராயத்தின் மேல் முடிவாகத் தீர்மானிக்கவும், மேலே செய்யவேண்டிய வேலைகளை நிர்ணயிக்கவும், அவர்கள் அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தைக் கூட்டிவைக்கவேண்டும்.

(ஊ) மேலே கண்டவாறு சுயராஜ்ய கட்சியினர் சட்டசபை ஸ்தானங்களை காலி செய்து விட்டு வருங்காலத்தில் அப்போதைக்கப்போது, காங்கிரஸினும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியாலும் செய்யப்படும் திருத்தங்களுக்குட்பட்டு சுயராஜ்யக் கட்சி அங்கத்தினர்கள் நடந்து வரவேண்டும்.

தென்னிந்திய ரெயில்வே ஆலோசனைச்சங்கம்.

1926—ம் வருடம் ஜனவரிமாதம் 23-ந் தேதி நடை பெறப்போகும், தென்னிந்திய ரெயில்வே ஆலோசனை சங்கத்திற்குக் கீழ்கண்ட விஷயங்கள் ஆலோசனைக்கு

(எ) இது சம்பந்தமான பிரசார வேலைகளின் ஆரம்பச்செலவிற்கு அவசியமான பணத்தை அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டியார் அனுமதிக்கவேண்டும். அதற்கு மேல் வேண்டியிருக்கும் பணத்தைக் காரியக்கமிட்டியார் எழுப்பவேண்டும்; அல்லது அவர்களுடைய மேற் பார்வையில் பொது ஜனங்களிடமிருந்து வசூல் செய்து கொள்ளவேண்டும்.

தேன்ஆப்ரிக்கா இந்தியர்

மகாத்மா காந்தி பின்வரும் தீர்மானத்தைப் பிரேரேபித்தார். யாவராலும் ஏகமனதாய் ஒப்புக்கொள்ளப் பட்டது. "தென் ஆப்ரிக்காவிலிருந்து வந்திருக்கும் பிரதிநிதி கோஷ்டியினருக்கு இக்காங்கிரஸ் மனப்பூர்த்தியான நல்வரவு கூறுவதுடன், அவர்களுடைய வாழ்விற்கே அபாயத்தை விளைவித்து விடுவதற்காகக் கிளம்பியிருக்கும் சக்திகளை எதிர்த்து தென்னாப்பிரிக்கா இந்தியர்கள் நடத்தி வரும் போராட்டத்திற்குப் பூரண ஆதரவளிப்பதாக வாக்களிக்கின்றது. பிரதேச ஒதுக்குமசோதா, குடியேற்றச் சட்ட திருத்தமசோதா இவைகள் 1914-ம் வருஷத்தில் ஏற்பட்ட ஸ்மட்ஸ்-காந்தி ஒப்பந்தத்திற்கு விரோதமானவை யென்றும், அங்குள்ள இந்தியர்களின் நிலைமையை 1914-ம் வருஷத்தில் இருந்ததை விடக் கேவலமாகச் செய்துவிடுவதுடன், தன் மதிப்புள்ள எந்த இந்தியரும் அங்கு வசித்திருக்கமுடியாமற் செய்துவிடக் கூடியவை யென்றும், இந்தக்காங்கிரஸ் அழுத்தமாகஅபிப்ராயப்படுகிறது.

1923-ம் வருடத்திய ஒப்பந்தத்திற்கு தென்னாப்பிரிக்கா இந்தியர்கள் செய்யும் வியாக்யானத்தை யூனியன் கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ளாவிடில் 1895-ம் வருஷத்திய டிரான்ஸ்வால் 1-வது சட்டத்தின்படி ஏற்பட்ட தகராறை மத்யஸ்தத்திற்கு விட்டதுபோல் இவ்விஷயத்தையும், மத்தியஸ்தத்திற்கு விடவேண்டுமென்று இந்த காங்கிரஸ் அபிப்ராயப்படுகிறது"

"இந்தப் பிரச்னையை சவுதன்யமாக தீர்த்து வைப்பதற்காக உண்மையான இந்தியபிரதிநிதிகளடங்கிய சர்வ கட்சி மகாநாட்டைக்கூட்டிவைக்கவேண்டுமென்ற கோரிக்கையைஇந்த காங்கிரஸ் ஆதரிக்கிறது இந்தக் கிரமமான யோசனையை யூனியன் கவர்ன்மெண்டார் அங்கீகரிப்பார்களென்று இந்த காங்கிரஸ் நம்புகிறது" சர்வ கட்சி மகா நாட்டைக் கூட்டிவைக்கும் முயற்சியும் மத்யஸ்தத்திற்கு விடும் முயற்சியும் பலிக்காவிடில் யூனியன் பார்லிமெண்டு இப்பொழுது சட்டத்தை மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தி நிராகரித்து விடவேண்டுமென்று இந்த காங்கிரஸ் அபிப்ராயப்படுகிறது"

தேவகோட்டை சரஸ்வதி வாசக சாலை.

குரோதன வருடம் மார்கழித்திங்கள் க0-ம் நாள் மாலை 4 மணிக்கு வாசகசாலைக் கட்டிடத்தில் திருவாளர் ப. வ. லெ. லெட்சுமணச்செட்டியாரவர்கள் தலைமையில் இம்மாதத்திய பொதுக் கூட்டம் ஒன்று கூடிற்று அவ்வமயம் ஸ்ரீமான்கள். மு. சுப்பிரமணியச்செட்டியாரவர்கள் 'அறஞ்செய விரும்பு' என்னும் பொருள்பற்றியும், அ. சாமிநாதன் செட்டியாரவர்கள் "ஆறுவது சினம்" என்னும் பொருள் பற்றியும், மெ. சி. மாணிக்கவாசகன்செட்டியாரவர்கள் 'கல்வி' என்னும் பொருள் பற்றியும் மிக அழகாக சொற்பெருக்கிட்டார்கள். பின்னர் தலைவர் அவர்களால் முடிவுரை கூறியதும் ஆரு. சுப்பிரமணியச்செட்டியாரவர்களால் தமிழ் மறை ஓதப்பெற்று மெ. சி. மாணிக்கவாசகன் செட்டியாரவர்களால் வந்தனோபசாரம் கூறப்பெற்று, இரவு 7 மணிக்கு கூட்டம் இனிது நிறைவெய்தியது என காரியதரிசி ஸ்ரீமான் அழ. லெட்சுமணச்செட்டியார் எழுதுகிறார்

வரப்போவதாக, அதன் அங்கத்தினராகிய, கோயமுத்தூர், ஸ்ரீமான். ராவ்சாகிப். சி. எஸ். ரத்னசபாபதி முதலியார், தெரிவிக்கிறார்.

விஷயங்கள்.

1. ரெயில்வேஸ்டேஷன்கள் பலவற்றில், கக்கூசுகள், கெட்டுப்போன மரத்துண்டுகளால் அமைக்கப்பட்டிருக்கிறது. இவைகளை எடுத்துவிட்டு, துத்த நாகத்தகடுகளைக்கொண்டேனும், அல்லது, காரைச்சுவர்கட்டி சாந்து பூசப்பட்டேனும் கட்டப்படவேண்டும்.

2. ரெயில்வேயில் ஏற்றப்படும் சாமான்களின் சார்ஜ் விகிதத்தைக் குறைக்கவேண்டும்.

2. பகலில் விடப்படும், மெயில் வண்டியிலானாலும், அல்லது சாதாரண ரெயில் வண்டியிலானாலும், அதில் சிற்றுண்டிசாலை வைத்திருப்பதுடன், அதில் குடிக்கத்தண்ணீர் எப்போதும் தயாராக வைத்திருக்கவேண்டும்.

3. மேட்டுப்பாளையத்திற்கும், பங்களூருக்கும் நேராக ஓடும் ஒரு வண்டியாவது, அங்ஙனம் சாத்தியப்படாவிட்டால் மெயில் வண்டியில், 3-வது கம்பார்ட்மெண்டுகளை கோர்த்தாவது விடவேண்டும்.

5 மேட்டுப்பாளையத்திற்கும், கோயமுத்தூருக்கும் விடப்படும் ஷட்டில் வண்டியின் நேரத்தை மாற்றி, பள்ளிக்கூட மாணவர்கள் சவுகரியமாகப் போவதற்குத் தக்கபடி காலத்தை நிர்ணயம் செய்ய வேண்டும்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு.

குரோதன-௵ மார்கழி-௴ ௨௰-௳

தேசிய காங்கிரஸ்

இவ்வருடம் கான்பூரில் இந்தியாவின் விடுதலைக் குழைக்கும் சபையென்னும், இந்திய தேசீய மகாநாடாகிய காங்கிரஸ் கான்பூரில் கூடிக்கலைந்தது.

இந்தியாவின் விடுதலைக்கும், இந்தியரின் சுயமரியாதைக்கும், அரசாங்கத்தைக் கொஞ்சமும் எதிர்பாராமலும், அவர்களின் அரசியல் மாய்கைகளை உபயோகப் படுத்திக்கொள்ளாமலும், அவர்களோடு விலகியிருந்து. நிர்மாணத்திட்டத்தை நிறைவேற்றி வைப்பதன் மூலமாகவே, தியாகத்திற்கும், கஷ்ட நஷ்டத்திற்கும், துணிவுகொண்டு உழைப்பதுதான் உண்மையான சுயராஜ்ய மார்க்கம் என்கிற, உறுதியைக்கொண்ட கூட்டத்தார், இவ்வாண்டு கான்பூர் காங்கிரசில் சரிவரக்கலந்து கொள்ளவேயில்லை. மகாத்மா காந்தியும், தான் தனியாகநின்று நடத்துவதாய் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் கதர் ஸ்தாபனமாகிய, நூல்நூற்கும், சங்கத்தை ஏதாவது ஒழித்துவிடுவார்களோ, எனப்பயந்து அதைக்காப்பாற்றிக் கொள்ளும்வரை கூட இருந்து விட்டு, மற்றவைகளில் அவரும் கலந்துகொள்ளாமல் காங்கிரஸ் மகாநாட்டுக்குக் கூடவராமல், மெல்ல நழுவி விட்டார். காக்கிநாடாவில் ஸ்ரீமான். ஈ வெ. இராமசாமி நாயக்கர், "இன்னும் இரண்டு வருடத்தில் இந்தக்காங்கிரசானது பழையபடி, பேச்சை விற்றுப் பிழைக்கும் வக்கீல் கூட்டத்தார் வசமும் படித்தவர்கள் என்போர் கை வசமும் போய்விடப்போகிறது; உண்மையாய் தேசத்திற்கு உழைக்கிறவர்களுக்கு காங்கிரசில் இடம் இருக்கப் போகிறதில்லை; ஆங்கிலம் படித்த சிலர் 'தங்கள் உத்தியோகமும், பதவியும் சம்பாதிப்பதற்காகவே காங்கிரஸ் உபயோகப்படப் போகிறது; இதற்கே, ஸ்ரீமான் சி. இராஜகோபாலாச்சாரியார் வழிதிறந்து விட்டுவிட்டார் அவர் தமது தியாகத்தின் பலனைப் அடைந்த செல்வாக்கை இப்போது, தன் கூட்டத்தவராகிய படித்த வகுப்பாருடைய நன்மைக்கே உபயோகப்படுத்துகிறார்." என்று கதறினது ஒரு எழுத்துக்கூட பொய்யாகாமல் நடந்து போய்விட்டது.

தமிழ்நாட்டில் இருந்தும், மற்றும்பல மாகாணங்களிலிருந்தும் ஒத்துழையாமையின்போது தியாகம் செய்து சிறைசென்ற முக்கிய தேசபக்தர்கள் அநேகமாய் இந்தக்காங்கிரஸிற்குப் போகவேயில்லை. முந்திய வருஷங்களில் ஏழைமக்களும் விவசாயிகளும், தொழிலாளருமான தேசபக்தர்களே முக்கிய பிரதிநிதிகளாயிருந்தார்கள். இவ்வருஷமோ; ஒத்துழையாமை உச்சத்தில் இருக்கும்போது காங்கிரசைத்திரும்பிக்கூட பார்க்காதவர்களும், பெரும்பாலும் ஸ்ரீமான். சி வி. வெங்கிட்டரமணய்யங்கார் போன்றவர்களும், பிராமணர்களுமே தமிழ் நாட்டின் சார்பாக முக்கிய பிரதிநிதிகளாயிருந்திருக்கிறார்கள். ஏறக்குறைய ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் இதுபோலவே, பொதுஜனங்களை ஏமாற்றி சட்டசபைப் பதவி பெறவும், உத்தியோகம் பெறவும், தங்கள் வகுப்பு ஆதிக்கத்தை பலப்படுத்திக் கொள்ளவும், ஆசைப்பட்டவர்கள் தான் போயிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

காங்கிரசின் பிரதிநிதித்வம் இப்படியிருக்க, நிறைவேறின தீர்மானங்களைப் பற்றியோவென்றால், எந்தெந்த சர்க்கார் உத்யோகத்தை ஒப்புக்கொள்ளுவது; எந்தெந்த சர்க்கார் உத்யோகத்தைத் தள்ளிவிடுவது; எப்படிப்பட்ட தீர்மானத்தைச் செய்தால் பாமரஜனங்களை ஏமாற்றி ஓட்டுப் பெறலாம், என்கிற விஷயங்களே காங்கிரஸின் முக்கிய நேரங்களைக் கவர்ந்து கொண்டது. அவரவர்கள் மாகாணத்தில், அவரவர்களுக்கு உள்ள சௌகரியத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டே சண்டைகள் பிடிக்கப்பட்டன. தமிழ் நாட்டு சுயராஜ்யக் கட்சியாருக்கு, தமிழ் நாட்டில் உத்யோகம் கிடைப்பதற்கு வழி இல்லாததால், தமிழ் நாட்டுத் தலைவர் "சீ இந்தப் பழம் புளிக்கும்," என்பது போல் உத்யோகமே பெறக்கூடாது என்று வாதாடினார்கள். ஆனாலும் இந்தியா சட்ட சபையில், தங்களுக்குக் கொஞ்சம் செல்வாக்கு இருப்பதினிமித்தம், சில உத்யோகம் பெற சவுகரியமிருப்பதால் அங்குள்ளவைகளை மாத்திரம் பெற்றுக் கொள்ளுவதில் ஆக்ஷேபனை இல்லை என்கின்றனர். இதுபோலவே மத்திய மாகாணத்திலும் சுயராஜ்யக் கட்சியாருக்குச் சில உத்யோகங்கள் கிடைப்பதற்கு சௌகரியமிருப்பதால் அவர்கள் அதைப் பெற்றுக்கொள்ளலாம் என்கின்றனர். இவ்விரண்டு கட்சியாரின் விவாதமே காங்கிரசின் நடவடிக்கையாய்ப் போய்விட்டது. பழைய வழக்கம்போல் தமிழ் நாட்டுப் பிராமணர்கள் ஆதிக்கமே காங்கிரஸில் இருந்ததால் தமிழ் நாட்டு நிலைமையை அநுசரித்தே (தமிழ் நாட்டிலும் உத்யோகம் சம்பாதிக்கக்கூடிய நிலைமை வருகிறவரையில், இந்தியா சட்ட சபை உத்யோகங்கள் நீங்கலாக) சில உத்யோகங்கள் பெற்றுக் கொள்ளக் கூடாது என்கிற தீர்மானம் நிறைவேறிற்று.

அதோடு பாமர ஓட்டர்களை ஏமாற்றத்தக்கதென்று சொல்லும்படியாக ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. அதாவது, தங்கள் கோரிக்கைகளைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ளாவிட்டால், பிப்ரவரி மாதத்தில் கவுன்சில் பதவியை ராஜிநாமாச் செய்து விடுவது என்பது, இது தேசத்தாரை ஏமாற்றுவதற்கென்றே, செய்த தீர்மானம் என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் மார்ச்மாதத்தில் தானாகவே சட்டசபைகள் கலையப்போகிறது. அப்படியிருக்க மார்ச்சு, அல்லது ஏப்ரல் மாதம் கலையப்போகும். சட்டசபை ஸ்தானத்தை பிப்ரவரிமாதம் 28-ந் தேதி ராஜிநாமாச் செய்வதில் சர்க்காரார் பயந்துவிடுவார்களா? அல்லாமலும் சுயராஜ்யக்கட்சியார் கோரிக்கையை இதற்கு முன் பல தடவைகளில் நிறைவேற்றினதை சர்க்காரார் ஏற்றுக்கொள்ளாமல் குப்பைத்தொட்டியில் போட்டுவிட்டார்களே; அப்போது ஏன் ராஜிநாமாச் செய்திருக்கக் கூடாது. பூனை கண்ணைமூடிக்கொண்டு பால் குடிப்பது போல், இவைகளையெலாம் பொது ஜனங்கள் அறியமாட்டார்கள் என நினைத்துக் கொண்டு எவ்வளவோ தந்திரமாகக் காங்கிரசை நடத்திவிட்டார்கள்.

33 கோடி ஜனங்களின் விடுதலைக்கும், சுயமரியாதைக்கும், சமத்வத்திற்கும் உழைப்பதாகச் சொல்லப்படும், இந்திய தேசிய மகாநாடே சூது மகாநாடாய்ப் போய்விடுமானால், குட்டி மகாநாடுகளின் யோக்கியதையைப் பற்றி சொல்லவும் வேண்டுமா?

காங்கிரஸ் தீர்மானத்தைப் பற்றி கல்கத்தா "சர்வெண்டு" பத்திரிக்கை எழுதுவதாவது:—"காங்கிரசில் நிறைவேறின பண்டித நேருவின் தீர்மானமானது மிகவும் சாதூரியமாக (ஜனங்கள் இரண்டு விதமாக எண்ணும்படி) இருக்கிறது அதாவது, காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியாரிடம் சரணகதி அடைந்துவிட்டது என்னும் அபிப்ராயங்கொண்ட தத்துவத்தை வெளிப்படையாகச் சொல்லுவதற்குப் பதிலாக, காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சித் திட்டத்தை எடுத்துக்கொண்டு அதை நடத்த வேண்டும் என்கிற வார்த்தைகளை கொண்டு தந்திரமாய்த் தீர்மானம் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஜனங்களின் ஓட்டுப் பெருவதற்காகவே பாமர ஜனங்களை ஏமாற்றத்தக்க வண்ணம் சர்க்காரைக் கடைசி முறையாக சில திருத்தங்கள் கேட்பது அது கிடைக்காவிட்டால் வெளியேவந்து விடுவதுஎன்றும், சட்டமறுப்பு செய்யப்படும் என்று சர்க்காரை மிரட்டுவதுமானதும் சட்ட சபைக்கு வெளியில் நிர்மாணத்திட்டம் நடத்துவது என்கிற பேச்சளவில் நிறைவேற்றக்கூடிய திட்டமும் அத்தீர்மானத்தில் கண்டிருப்பதானது ஓட்டர்களை ஏமாற்றுவதற்கு மிகவும் அநுகூலமானதுதான்." இதிலிருந்து இவ்வருட தேசியக்காங்கிரசின் போக்கை வாசகர்கள் அறிந்து கொள்ளலாம்.

பிராமணரல்லாதார் காங்கிரஸ்.

சென்னை மாகாணத்தில் உள்ள பிராமணரல்லாதார் இயக்கம், தமிழ் நாட்டுப் பிராமணர்களால் சென்சார் வைத்து, வெளி மாகாணங்களுக்குப் போகாமலிருக்கும்படி தடுத்து வந்த பலத்த சூட்சிகளையும் தாண்டிக்கொண்டு இப்போது இந்தியா முழுவதுமே பாவிவருகிறது. அகில இந்தியா பிராமணரல்லாத காங்கிரசுக்கு இது இரண்டாவது வருஷம்.

தேசிய காங்கிரஸ் ஆதியில் கூட்டப்பட்ட காலத்தில் அதற்கு இந்தியா முழுவதுக்குமாக 75 பேர்கள்தான் பிரதிநிதிகளாக வந்திருந்தார்கள். அது நாளுக்குநாள் அடையவேண்டிய வளர்ச்சியை அடைந்து மகாத்மாகாலத்தில் 5000 கணக்கான பிரதிநிதிகளை அடைந்து, எவ்வளவு மேல்போகவேண்டுமோ, அவ்வளவும் போய், இப்போது இறங்குமுகத்தில் இருக்கிறது.

இது இவ்விதமிருக்க இந்தியாமுழுவதுக்குமே பிராமணரல்லாதார் மகாநாடு ஆரம்பித்து இரண்டு வருஷம்தான் ஆகிறது. ஆரம்ப முதல் வருஷத்தில், ஆதிதேசிய காங்கிரஸ் போல் பத்துக்கணக்காய் பிரதிநிதிகள் இல்லாமல், நூற்றுக்கணக்கான பிரதிநிதிகள் பெல்காமில் கூடினார்கள். இரண்டாம் வருஷத்தில் அம்ரோடி என்னும், அமராவதியில் 5000 பிரதிநிதிகள் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள். பதினாயிரக்கணக்கான ஜனங்கள் இதில் கலந்துகொண்டிருக்கிறார்கள், இன்னும், நாளாக ஆக அது என்ன நிலை வந்தெய்தும் என்பது யோசனையுள்ளவர்களுக்கு நன்றாய் விளங்கும்.

பிராமணரல்லாத இயக்கத்தின் தலைவர்களாகிய, ஸ்ரீமான்கள் டாக்டர். டி. எம். நாயர், ஸர். பி. தியாகராய செட்டியார், ஆகியஇவர்கள் காலமானதற்குப் பிறகு பிராமணரல்லாத பாமர ஜனங்களின் உண்மை நிலையைச் சரியாய் அறியாதவர்களும், அவர்களிடம் பழகாதவர்களும், பணக்காரர்களும்,பெரிய மிராஸ்தாரர்களும்,ராஜாக்களும், ஜமீன்தாரர்களும், உத்தியோகஸ்தர்களும் தலைமை வைத்து நடத்து வதாயிருப்பதால் பிராமணரல்லாத பாமர ஜனங்களின் முழு செல்வாக்கையும் பெற காலதாமதமாகி வருகிறது. ஆனாலும் பிராமணரல்லாத இயக்கம் என்று ஒரே கட்டுப்பாடான இயக்கம் இந்தியா பூராவையும் இன்னும் சரியானபடி ஒன்றுயச் சேர்க்கவில்லையென்று வைத்துக் கொண்டாலும், ஆங்காங்கு சிறு சிறு கிராமங்களில்கூட பிராமணதிக்கத்தின் கஷ்டங்களையும், தந்திரங்களையும் உணர்வதும், அதிலிருந்து தப்ப தனித்தனியாய் வழி தேடுவதுமான மார்க்கங்களில் ஏதோ சிலர் தவிர, (அதுவும் பிராமணர்கள் தயவு இல்லாமல் அடியோடு பிழைக்க - முன்னுக்குவர—தலைவராக, முடியாமல் இருக்கின்ற சிலர் தவிர) மற்றெல்லோரும் ஈடுபட்டிருக்கிறார்கள். பிராமணரல்லாதார் வகுப்பில் பிறந்த மகாத்மாவைப் போல் பார்ப்பனரல்லாதாரான ஓர் உத்தமர் இவ்வியக்கத்தைத் தலைமை வகித்து நடத்துவார்களேயானால், மூன்று வருடங்களுக்கு மேல், இவ்வியக்கமே தேவையில்லாத அளவு முன்னேற்றமடையும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. இந்த பார்ப்பனரல்லாத காங்கிரஸ், இனி வருஷாவருஷம் ஒவ்வொரு பெரிய பட்டணங்களில் கூடிக்கொண்டுதான் வரும். அப்படிக்கூடுவதில் தேசிய காங்கிரஸ் கூட்டு மிடங்களில், இதைக்கூட்டுவது நன்மை தரத்தக்கதல்ல வென்பது நமதபிப்பிராயம். ஏனெனில் தேசிய காங்கிரஸ் கூடுமிடங்களில் பார்ப்பனரல்லாதார் காங்கிரஸ கூடுவதாயிருந்தால் பிராமணரல்லாத ஜனங்கள் ஆடம்பரமாயிருக்கும் விஷயத்திற்கு மனம் செலுத்துவார்களே யல்லாமல் முக்கியமான விஷயங்களைச் சரிவரக் கவனிக்கமாட்டார்கள்: உதாரணமாக, கதரின் மேன்மையை எடுத்துச் சொல்லவும், குடியின் கேட்டை ஒழிக்கவும், பாமர ஜனங்கள் உள்ள ஒரு இடத்தில் ஒருகூட்டம் கூட்டி அதற்குப் பக்கத்தில், கழைக்கூத்தனை ஒருதொம்பனையும் மத்தளம் தட்டி ஆ! ஆ!! என்றுசொல்லிக் கொண்டிருக்கச்செய்தால் பாமர ஜனங்கள் கழைக்கூத்தைப்பார்க்கத்தான் போவார்களேயல்லாமல், கதரின்மேன்மையையும், குடியின்தீமையையும் கேட்க வரமாட்டார்கள். அதுபோலவே தேசிய காங்கிரசிற்குப்பணம் இருக்கிறது; தாராளமாய்ப்பணம் செலவு செய்யும், தலைவர்கள் என்று சொல்லப்படுவோர் வருவார்கள்; நல்லபேச்சுக்காரர் வருவார்கள்; என்று நினைத்து வேஷம்பார்ப்பதிலேயே, பாமர ஜனங்களின் கவனம் இழுக்கப்பட்டுப் போகும், ஆதலால், பார்ப்பனரல்லாதார் மகாநாட்டை தேசியக்காங்கிரஸ் கூடாத இடத்தில்தான் கூட்டவேண்டும்.தேசியக்காங்கிரஸ் தீர்மானங்களைப்போல் சட்டசபைக்குப் போகத்தகுந்தமாதிரியும் உத்தியோகம்பெறத்தகுந்த மாதிரியுமான தீர்மானங்களைமாத்திரம் போட்டுக்கொள்ளாமல், மகாத்மா காங்கிரஸ் தீர்மானங்களைப்போல் தேசத்திற்கும், அநுகூலமுள்ளதாகவும், கிராமம், கிராமமாய்ப் போய்ப் பிரசாரம் செய்து கிராமவாசிகளுக்கு நன்மை பயக்கக்கூடியதான தீர்மானங்களையே செய்ய வேண்டும். செய்தபடி நடக்கவும்வேண்டும்.

தியாகம் செய்வதற்கும், கஷ்டப்படுவதற்கும், துணிந்தவர்களர்களே முன் வந்து வேலை செய்ய வேண்டும். காலரும், டையும் பூட்ஸூம், சராயும், ஆங்கில தொப்பியுமுள்ளவர்கள்,பிராமணரல்லாதார் நன்மையைப் பற்றி பேசினுலாவது, தலைமைவகித்து நடத்தினுலாவது, அதோடு ஒரு பயனும் விளையாது, அரசாங்கத்தார் தயவிருந்தால்தான் பிராமணரல்லாதார் முற்போக்கடைய முடியுமென்ற எண்ணத்தை அடியோடு ஒழிக்கவேண்டும் அரசாங்கத்தார் தயவில்லாமலே முன்னுக்கு வரக்கூடிய நிலைமையை உண்டாக்கிக் கொள்ளவேண்டும் தனிப்பட்ட சுய நல எண்ணமில்லாமல், பிராமணரல்லாதார் கட்டுப்பாடாய் உழைப்பதாயிருந்தால், மகாத்மாவின் ஒத்துழையாமை தத்துவத்தாலும் நிர்மாணத் திட்டத்தாலுமே முன்னுக்கு வரலாம். அந்த நிலைமையில் ஏற்படுத்தப்படும் முன்னேற்றம்தான் நிலைத்து நிற்கக்கூடியது. அப்படிக்கில்லாத முன்னேற்றம் நிலையானதல்லஎன்பதை பிராமணரல்லாதார்கள் உணர வேண்டும்.

பரிதபிக்கத்தக்க இரண்டு மரணங்கள்.

ஈரோடு தாசில்தார் ஸ்ரீமான். சாமியல் பிள்ளை அவர்களின் மூத்தகுமாரன் M. B. B. C. M. வைத்திய வகுப்பில் வாசிக்கும் 25-வயதுள்ள ஸ்ரீமான். டானியல் என்பவரும், நான்காவது குமாரன் அய்ந்தாவது பாரத்தில் வாசிக்கும் 14-வயதுள்ள டேவிட் என்பவரும் புது வருடத்தினத்தன்று வேடிக்கையாய் பிற்பகல் 4 மணிக்கு ஈரோட்டிற்கு 3 மயில் தூரத்திலுள்ள எல்லப்பாளையம் குளத்திற்கு துப்பாக்கியுடன் வேட்டையாடப் போனார்கள். குளத்தண்டை போனதும் பக்கத்தில் இருந்த ஒரு பறவையை சுட்டதில் அது தண்ணீரில் விழுந்தது. அதை எடுப்பதற்காக இளையவனான டேவிட் என்பவன் தண்ணீரில் இறங்கி கொஞ்சதூரம் சென்றவுடன் திடீரென்று எதிர்பாராத ஆழம் தென்பட்டு நீந்திக்கொண்டு போகையில் கையுங்கால்களும் சோர்வுற்று கரையில் இருந்த தமையனைப்பார்த்து சத்தம்போட்டதும் தமயனான ஸ்ரீமான். டானியல் சட்டென்று தண்ணீரில் குதித்து தம்பியைகரையேற்றப்போனவர் அதே வழியில் போனதால் அவருக்கும் அது போலவே ஏற்பட்டதோடு தம்பி டேவிட் தமயனை ஸ்ரீமான். டானியலைக் கட்டிப்பிடித்துக் கொண்டதால் நீந்தமுடியாமல் தண்ணீரில் ஆழ்ந்து இருவரும் உயிர்விடநேர்ந்தது பிறகு இரவு எட்டுமணிக்கு தகப்பனுருக்கு தகவல் கிடைத்தது அவர் ஆள்களுடன் குளத்திற்கு போய் இரவெல்லாம் சரீரங்களைத்தேடியும் அகப்படாமல் மறுநாள் காலை 7 மணிக்கு கிடைத்தது புதுவருஷப்பிறப்பன்று நல்லகுணமும் தயாளத்துவமும் பொருந்திய நமது நண்பர் ஸ்ரீமான்.சாமியல்பிள்ளை அவர்களுக்கும் அவரது அருமை மனைவியாருக்கும் ஏற்பட்ட துக்கத்திற்கு நாம் மிகவும் விசனப்படுவதுடன் அன்புமக்களைப் பிரிந்த உத்தம தாய்தகப்பன் மாருக்கு ஆறுதலையும் தேறுதலையும் அளிக்குமாறு எல்லாம் வல்ல கடவுளை பிரார்த்திக்கிறோம்.

காஞ்சீபுரம் மகாநாட்டிற்கு பிறகு ஸ்ரீமான். கல்யாணசுந்திர முதலியாரின் புதிய பிறப்பு.

நவசக்தி ஆசிரியர் ஸ்ரீமான். திரு. வி. கல்யாணசுந்திர முதலியார் தமது புது வருடப்பிறப்பு நவசக்தியில் பிராமணரல்லாதார் என்ற தலைப்பின் கிழ்

"ஜஸ்டிஸ் கட்சி தோன்றிய போது ஏற்படுத்திய சென்னை மாகாணச் சங்கமானது ஜஸ்ட்டிஸ் கட்சியை ஒடுக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டது ஆதலால் அச் சங்கத்தை நிலையாக்க நிறுத்திக்கொண்டிருப்பது அறிவுடைமையாகாது" என்று உண்மையை மறைக்காமல் இப்போதாவது சொன்னதற்கு தமிழ் மக்கள் ஸ்ரீமான். முதலியாருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்களாவார்கள் ஆனால் இந்த உண்மையை பொது ஜனங்களில் வெகு பேர் இன்னம் உணராமல் இருக்கிறார்கள்.

"ஸ்ரீமான். தியாகாரய செட்டியார் போன்ற அனேக பிராமணரல்லாத பெரியோர்கள் சென்னை மாகாணச்சங்கம் ஏற்படுத்தப்பட்ட காலத்திலேயே இந்த உண்மையைச் சொன்னார்கள். அதாவது "சென்னை மாகாண சங்கம் பிராமணர்கள் சூழ்ச்சியால் இரண்டொரு பிராமணரல்லாதாரை பல வழிகளில் சுவாதீனப்படுத்திக் கொண்டு, ஜஸ்டிஸ் கட்சியை ஒடுக்குவதற்காகவே ஏற்படுத்தப்பட்டது. அதற்கு சிலவுக்குப் பணமும் பிராமணர்களால் தான் கொடுக்கப்பட்டு வருகிறது" என்று ஓயாமல் கதறினார்கள். ஆனால் அது சமயம் நமது ஸ்ரீமான் திரு. வி கலியாணசுந்திர முதலியார் அவர்கள் அதை மறுத்ததோடு "தாங்கள் தான் பிராமணரல்லாதாரின் உண்மைக்கு உழைக்கின்றவர்கள் என்றும் தங்கள் சங்கம் தான் உண்மைப் பிரதிநிதித்துவம் வாய்ந்ததென்றும் இதைக்கொண்டே பிராமணரல்லாதார் முன்னேற்றமடையல"மென்றும் சொன்னார்கள். இப்போது இப்படிச்சொல்வது நம்பிக்கைத் துரோகமா அல்லவா என்பதை இப்போதாவது பிராமணரல்லாதார்கள் அறியக் கோருகிறோம்.

அதே தலைப்பில் மற்றொரு இடத்தில் "காஞ்சி மகாநாட்டின் நடை முறையைப் பற்றி சிலர் பேசிவரும் பேச்சுக்களும், எழுதிவரும் எழுத்துக்களும் எமது (தமது) கருத்தை இத்துறையில் இழுத்திருக்கின்றன என்செய்வோம்"

என்று எழுதியிருக்கிறார் இந்த உண்மையை வெளியிட்டதற்கும் தமிழ்மக்கள் அவருக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஏனெனில் இது ஸ்ரீமான். முதலியாருக்கு எப்போதும் ஏற்பட்ட அபிப்பிராயமல்லவென்பதும், ஸ்ரீமான். முதலியாரின் காஞ்சீபுரம் மகாநாட்டு நடவடிக்கைகளை சிலர் வெளியாக்கிய பின் ஏற்பட்டதென்பதையும் விளக்கமாக விளங்கும்படி காட்டிவிட்டார் ஆனால் ஸ்ரீமான். முதலியார் இப்படி புது அவதாரம் எடுத்துக் கொள்வார்கள் காஞ்சிமகாநாட்டைப்பற்றி அதிகமாய் எழுதாதீர்கள். என்று நமக்கும் பலர் எழுதியிருக்கிறார்கள். ஆனபோதிலும் இதை எதிர்பார்த்தேதன் இப்படிப்பட்டவர்களை எத்தினை நாளைக்கு மூடிவைக்க முடியும் உண்மைக்கு யோக்கியதை உண்டா இல்லையா என்பதை பார்த்துவிடுவோம் என்று எண்ணித்தான் தைரியமாக வெளிப்படுத்தினோம். நமக்கு பலர் கடிதம் எழுதியது போலவே நடந்துவிட்டது இனியும் இதுபோல் பலர் கிளம்பக்கூடும் இதற்கெல்லாம் தலை கொடுக்க யோக்கியதை இருந்தால் தான் பிராமணரல்லாதாருக்கு உண்மையான யோக்கியதை உண்டாகும் அப்படிக்கில்லாமல் எல்லாவற்றையும் மூடி வைத்துக்கொண்டு லஞ்சம் லாவணம் கொடுத்து யோக்கியதை அடைவது ஒரு நாளும் நிலைத்திருக்காது.

உண்மைவிடுதலைக்கு வெள்ளைக்காரரோடு நாம் சண்டை செய்ய ஆரம்பித்தால் ராஜாக்களும் ஆங்கிலோ இந்தியரும் சேருவார்கள் என்று எதிர்பார்ப்பது எவ்வளவு பையித்தியக்காரத்தனமோ அதுபோல்தான் ஸ்ரீமான். முதலியார் போன்ற ராஜிய வாதிகள் நமக்கு உதவி செய்வார்களென்று நினைப்பதும் அவ்வளவு பயித்தியக்காரத்தனமாகும். ஆனால் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் இது விஷயத்தில் உண்மையை மறைக்காமல் எழுதினதற்கு நாமும் நன்றி செலுத்துகிறோம்.

அல்லாமலும், "சுயராஜ்பக் கட்சியார் தோன்றிய பிறகு நாட்டில் வகுப்புத் துவேஷங்களும் வகுப்புப் பூசல்களும் ஏற்பட்டது" என்று சொன்ன——எழுதின ஒருவர்க்கு காஞ்சிபுரம் மகாநாட்டிற்குப் பிறகும் காங்கிரசில் காந்தியம் ஒழிந்தது உண்மை என்று ஒப்புக் கொண்டதற்குப் பிறகும், "சுயராஜ்யக்கட்சி வழிப்பற்றி வினையாற்றி பழய நிலை எய்தவேண்டும்" என்கிற எண்ணம் தோன்றியதைப்பார்த்தால் பொது ஜனங்களுக்கு ஆச்சரியமாகத்தானிருக்கும். அல்லாமலும் 'பிராமணரல்லாதார் இயக்கத்தைப்பற்றி எழுதுகையில் பிராமணரல்லாதாருக்குள் பிளவை உண்டுபண்ணும் இயக்கம் பிராமணரல்லாதார் இயக்கமாகுமா என்று எழுதுகிறது. பிராமணரல்லாதார் இயக்கம் எல்லா பிராமணரல்லாதாருக்கும் இடம் தரவேண்டும் என்றும் எழுதுகிறது. இது வேண்டுமென்றே முன் ஜஸ்டிஸ் கட்சியை ஒடுக்க சென்னை மாகாண சங்கத்தை ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னதுபோல், இப்பொழுதும் பிராமணரல்லாதார் இயக்கத்தை ஒடுக்குவதற்கு கூறப்பட்ட பழியாகுமே அல்லாமல் வேறல்ல. ஏனெனில் தற்போதய பிராமணரல்லாதார் இயக்கக்கொள்கை எந்த பிராமணரல்லாதாருக்குள் பிளவை உண்டு பண்ணுகிறது. எந்த பிராமணரல்லாதாரை அதில் வந்து சேரமுடியாமல் தடுக்கிறது என்கிற விபரத்தை எழுதி பிறகு அதின் மேல் குற்றமெழுதினால் நடுவுநிலைமையில் இருந்து எழுதுகிறார். என்று சொல்லலாம் அப்படிக்கில்லாமல் அவற்றின் உண்மையான கொள்கைகளையும் வெளிப்படுத்தாமல் மறைத்து வேண்டுமென்றே பழிசுமத்தினால் உலகம் நம்பி விடுமா? ஆனாலும் இனியும் கொஞ்சகாலம் சென்றபிறகு இதுபோலவே இதன் உண்மையையும் அதாவது பிராமணரல்லாதார் இயக்கத்தை அழிக்கத் தான் தாம் வேண்டுமென்றே இம்மாதிரி எழுதிவந்ததாகவும் ஒப்புக்கொள்ளுவார்.

அல்லாமலும் "காஞ்சீபுரம் மகாநாட்டிற்குப்பின் தனது கருத்து இவ்வளியில் இழுக்கப்பட்டு விட்டது என்செய்வோம் என்று அவரே விசனப்பட்டு எழுதுகயில் நாம் இதுகளில் குற்றம் காண்பதற்கு பொருளேயில்லை நடப்பது நடக்கட்டும் உண்மையை உலகம் அறியட்டும்:—

வந்தேமாதரம்.

ஸ்ரீமான். R. K. ஷண்முகம் செட்டியார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி ஸ்ரீமான். R. K. ஷண்முகம் செட்டியார் அவர்கள் "மித்திரன்" நிருபருக்கு பேட்டி கொடுத்துப் பேசியதில் கான்பூர் காங்கிரஸ் தீர்மானத்தைப் பற்றி தனது அபிப்பிராயம் கூறியதாவது:—

"கான்பூர் காங்கிரசில் தயாரிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் நிறைவேறுவது பகவத் சங்கல்பத்தை பொட்டி இருக்கிறது. இருந்தாலும் மற்ற ராஜியக்கட்சிகள் வாயளவில் தீர்மானங்கள் நிறைவேற்றியதுடன் நின்றிருக்கையில் காங்கிரஸ் வாதிகளுக்கு கிரியாம்சையில் சரியான ஒரு வழியைக் காட்டி இருக்கிறது. முடிவான லக்ஷியத்தைப் பற்றிய வரையில், எல்லா கக்ஷிகளுக்குள்ளாகவும் அனேகமாக ஒற்றுமை இருக்கிறது- அந்த லக்ஷியத்தைப்பெற என்ன முறை அனுஷ்டிப்பது என்பதே இப்பொழுது முக்கிய விவகாரமாக இருக்கிறது. இப்போது காங்கிரசின், நடைமுறைத்தீர்மானம் சிறந்ததென்றும் குற்றமில்லாதது என்றும் நான் சொல்லவில்லை. ஆனால் வழவழவென்று ஒருவேலையும்செய்யாதவர்கள் கான்பூர் முடிவைக்கண்டிக்க முடியாது" என்று உண்மையைப் பேசியிருக்கிறார். அவரே அப்படிச்சொல்லியிருக்கையில் கான்பூர் காங்கிரஸ் தீர்மானங்களின் யோக்கியதை எப்படி இருக்கும் என்பதையும், அதைக்கட்டி முத்தமிடுகிறவர்கள் யோக்கியதையும், வாசகர்களை அறிந்து கொள்ள விரும்புகிறோம்.

அகில இந்திய பிராமணரல்லாதார் காங்கிரஸ்.

அமராவதி ரயில்வேஸ்டேஷனில் காங்கிரஸ் தலைவராகிய கனம், பனகல் ராஜாவையும், பிரதிநிதிகளையும், கோலாப்பூர் மகாராஜாவையும் சுமார் 15,000 ஜனங்களுக்குமேல் நின்று வரவேற்றனர்.

அமராவதியில் டிசம்பர் மாதம் 28, 29, 30-ந்தேதிகளில் நடை பெற்ற அகில இந்திய பிராமணரல்லாதார் மகாநாட்டின் தலைவர், கனம் பனகல் ராஜா தமது கோஷ்டியுடன் ஸ்பெஷல் ரெயிலில் அமராவதி ஸ்டேஷன் பிளாட் பாரத்திற்குள் வந்ததும், சுமார் 15,000 ஜனங்களுக்குமேல் நின்று, பலத்த கரகோஷங்களுடனும், சந்தோஷ ஆரவாரகைளுடனும் வரவேற்றனர். ஸர். தியாகராய செட்டியாருக்கு ஜே. டாக்டர் நாயர் பெருமானுக்கு ஜே. பனகால் அரசருக்கு ஜே. சத்தரபதிக்கு ஜே. என்று ஆரவாரித்தார்கள். 300 தொண்டர்களுக்குமேல் அழகிய உடையணிந்து, ஆங்காங்கு நின்று தலைவருக்கு மரியாதை செய்ததுடன், ஜனங்கள் சவுகரியமாகப் போகவும், வரவும் ஏற்பாடு செய்துகொண்டிருந்தனர். ஸ்டேஷனருகாமையில் இரண்டு பெரிய பந்தல்கள் போடப்பட்டு எங்கும், தோரணங்களாலும், கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது அப்பந்தல்களில், "கனம் பனகால்ராஜாவும்" "சத்ரபதி மகாராஜாவும் நீடூழிவாழ்க,, என பெரிய எழுத்துக்களால் வரையப்பட்டிருந்தன. ஊர்வலம் ஆரம்பமாயிற்று. தொண்டர்கள் முன்னே செல்ல பாண்டு வாத்தியம் முழங்கிக் கொண்டிருக்க, திரளான ஜனங்கள் பாதையின் இருமருங்கிலும் புடைசூழ்ந்து நிற்க, கனம் பனகல்ராஜா முதல் மோட்டாரிலும், மற்றத்தலைவர்கள் பின்வண்டிகளிலும் சென்றனர். ஊர்வலம் சென்ற இடங்கள் நெடுக பல வளைவுகள் போடப்பட்டு ஒவ்வொன்றும் அலங்கரிக்கப்பட்டிருந்தது ஊர்வலம் சென்ற இடமெங்கும் ஜனங்கள் கரகோஷம் புரிந்துகொண்டே யிருந்தார்கள். வெகுநேரங்கழித்து தலைவர்களுக்கென்று தயாரிக்கப்பட்டிருந்த ஜாகைக்கு ஊர்வலம் வந்து சேர்ந்து. பிரதிநிதிகள் 5000-பேருக்குமேல் பதிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் யாவரும் தங்குவதற்கென்று ஏராளமான கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

காங்கிரஸ் ஆரம்பம்

28-ந் தேதி பிற்பகல் காங்கிரஸ் ஆரம்பமாயிற்று. பிரதிநிதிகளும், விசிட்டர்களுமாக பத்தாயிரம் பேருக்கு மேல் பெரிய பந்தலுக்குள், நிறைந்திருந்தனர். 200-பெண்மணிகளும் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. காங்கிரஸ் ஆரம்ப சமயத்தில் பலத்த மழை பெய்தபோதிலும், ஒருவரும் இடத்தைவிட்டு அகலவில்லை. வானமும் சீக்கிரத்தில் தெளிந்துவிட்டது. பெண்மணிகள் சிலர் சங்கீதம் பாடினர். காங்கிரஸ் நடவடிக்கையும் ஆரம்பமாயிற்று.

கோயமுத்தூர் கனவான்களின் ஆசிச்செய்திகள்

கோயமுத்தூரிலிருந்து, அகில இந்தியா பிராமணரல்லாதார் காங்கிரசுக்கு போக சவுகரியப்படாத கனவன்கள் ஆசிகூறி அநுப்பிய செய்திகளாவன:—

ஸ்ரீமான். ராவ்சாகிப் ஸி. எஸ். ரத்ன சபாபதி முதலியார்:— சுயராஜ்யமாகிய நமது லக்ஷியத்தைச் சீக்கிரத்திலடைவதற்கான முறைகளை வற்புருத்தி எல்லா மாகாணங்களிலும், வகுப்புவாரிப்பிரதிநிதித்வம், மதுவிலக்கு, சுதேசியம், தீண்டாமைவிலக்கு, கட்சிப்பத்திரிக்கைகளைப் பலப்படுத்துதல் முதலிய வற்றைக்குறித்துப் பலமான கிளர்ச்சி செய்யப்படவேண்டும்.

ஸ்ரீமான். வி. வெரிவாடசெட்டியார்:— காங்கிரஸ் கூட்டத்திற்கு வரக்கூடாமைக்கு விசனிக்கின்றேன் நிர்மாண நடைமுறையில் முக்கியமாகக் கதர், மது விலக்கு முதலியவற்றை வற்புருத்தவேண்டும். நமது காங்கிரசுக்குப் பெரும் வெற்றியுண்டாகவேண்டுமென்று எழுதுகிறேன்.

ஸ்ரீமான். வி. அருணாசலம் செட்டியார்:—அம்ரோட்டிக்கு வரமுடியாதது பற்றி வருந்துகின்றேன் நிலையான கொள்கையற்று, சமயத்துக்கேற்ற வேடந்தரிக்கும் சுயராஜ்யக்கட்சிக் கொள்கையை வெளியாக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

ஸ்ரீமான். ஸி. வி.வி. சுப்பையாசெட்டியார்: தீண்டாமை என்னும் பெருந்தீங்கு ஒழிக்கப்படும் வரையில் தேசியமென்பது வெறும்பேச்சுத்தான். பிறப்பு சம்மந்தமான எத்தகைய வித்தியாசமுமின்றி அனைவருக்கும் சமத்துவமான சந்தர்ப்பமளிக்கப்படுவதை வற்புருத்தவேண்டும். ஸ்ரீமான். வி. பாலுசாமி நாயுடு, அம்ரோட்டி காங்கிரசுக்கு வரக்கூடாமைக்கு வருந்துகிறேன். அடுத்த தேர்தலில் பிராமணரல்லாதாருக்கு வெற்றி ஏற்படக்கூடிய முறைகளைத் தீர்மானியுங்கள். காங்கிரசுக்கு வெற்றி யுண்டாவதாக.

அமராவதி பிராமணரல்லாதார் காங்கிரஸ் தீர்மானங்கள்.

1 அலெக்ஸண்டிரா மகாராணியார் இறந்து போனதற்காக, தனது மனமார்ந்த அநுதாபத்தை வணக்கத்துடன் இந்தக் காங்கிரஸ் மன்னர் பெருமானுக்குத்தெரியப்படுத்துகிறது.

2. பிராமணரல்லாதார் இயக்கத்தின் தலைவராகிய ஸர். பிதியாகராய செட்டியார் காலமடைந்ததைக் குறித்துத் துக்கித்தும், அவர் ஞாபகதினத்தை ஒவ்வொரு ஆண்டிலும் ஏப்ரல் மாதம் 28-ந் தேதி கொண்டாடுவதென்றும் தீர்மானிக்கிறது.

3. தேசத்தின் பெரியார்களான, குவாலியர் மகாராஜா ஸர்.சுரேந்திரநாத்பானர்ஜி சித்தரஞ்சனதாஸர்திவான்பகதூர் சுவாமிக்கண்ணுப்பிள்ளை, முதலியவர்கள் மரணத்துக்காக துக்கத்தைத் தெரிவிப்பதுடன், காலஞ்சென்ற கோலாப்பூர் அரசர் சாகுசத்ரப அவர்களின் ஊழியத்தைப் பாராட்ட ஆண்டுதோறும், மேமாதம் 6-ந் தேதியைக்கொண்டாடுவதாயும், தீர்மானிக்கப்பட்டது.

(4) பல மாகாணங்கள் சீர் திருத்தத்தை நடத்திக் காட்டி விட்டபடியாலும், மத்தியமாகாணங் களிலும், பீராரிலுமுள்ள பிராமணரல்லாதாரும் சீர்திருத்தச் சட்டத்தை நடத்த தயாராயிருக்கிறபடியாலும் எல்லா மாகாணங்களுக்கும், இன்னும் அதிகசீர்திருத்தங்கள் கொடுக்கக் காலம் வந்துவிட்டதென்றும், இந்திய மந்திரியின் அதிருப்திகரமான பதிலுக்கு வருந்துவதாயும், இந்தியாவில் உண்மையில் சுயாட்சி ஏற்படுத்த பிரிட்டிஷ் மந்திரி சபை விரும்பவில்லையென்று ஏற்பட்டிருக்கும் அபிப்ராயம் ஒழியுமாறு, அவசியமானல் போதிய பாதுகாப்புகள் அமைத்துக்கொண்டு, எல்லா மாகாணங்களுக்கும், மாகாண சுயாட்சி கொடுத்து விடவேண்டுமென்று, கனம் வைசிராய், இந்தியா மந்திரி, பிரிட்டிஷ் மந்திரி சபை இவர்களைக் கேட்டுக் கொள்ளுவதாகவும், இக்காங்கிரஸ் உறுதியாய் அபிப்ராயப்படுகிறது.

(5) அடுத்த சட்டசபைத் தேர்தல்களில் மத்தியமாகாணத்திலும், பீராரிலுமுள்ள மகமதியர், கிறிஸ்தவர். பார்சிகள் உள்படவுள்ள பிராமணரல்லாத அனைவரும், எத்தனை ஸ்தானங்களைக் கைப்பற்றமுடியுமோ, அத்தனையும் கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென்றும், பிராமணரல்லாத மந்திரி சபையை ஏற்படுத்தவேண்டுமென்றும், குடியாட்சியை வளர்க்க சீர் திருத்தச் சட்டத்தை நடத்தி வைக்க வேண்டுமென்றும் இக்காங்கிரஸ் கேட்டுக் கொள்ளுகிறது.

(6) மத்திய அரசாங்கத்தை வாக்காளர்களுக்குப் பொருப்புள்ளதாய்ச் செய்ய வேண்டுமென்று இக்காங்கிரஸ் அபிப்பராயப்படுகிறது.

7. தென்னாப்பிரிக்காவிலிருந்து வந்திருக்கும் இந்தியப்பிரதிநிதிகளின் கூட்டத்தை வரவேற்பதாகவும் தேசத்திலுள்ள பிராமணரல்லாதாரனைவரும் அவர்களுக்குத் தம்மாலியன்ற உதவியைச் செய்யத் தயாராயிருக்கின்றார்களென்றும், இக்காங்கிரஸ் மூலமாகத் தீர்மானிக்கிறது. மேலும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஒருபாகத்தில் இந்தியர்களைக் கொடுமையாய் நடத்துவதினல், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கே அழிவு நேரிடுமென்றும், தென்னாப்பிரிக்கா வெள்ளையர்கள் இந்தியர்களுக்கு நியாயம் வழங்கும்படி செய்ய காரியத்தில் நடக்கக்கூடிய பதிலுக்குப்பதில் செய்யும், திட்டம் போன்ற முறைகளைக் கையாள வேண்டுமென்றும், வைசிராயையும், இந்தியா கவர்ன்மெண்டாரையும், பிரிட்டிஷ் மந்திரிசபையையும், இக்காங்கிரஸ் கேட்டுக் கொள்ளுகிறது.

8. 1924—ம் வருடம் டெல்லியில் நடைபெற்ற அகில இந்திய ஒற்றுமை மகாநாட்டில் நிறை வேற்றப்பட்ட, ஒற்றுமைத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளுவதாகவும்

இத்தொடர்ச்சி 11-வது பக்கம் பார்க்க

கல்வியில்லாத குறை

நமக்கு கல்வி போதிக்கப்படவேண்டிய அளவு இன்னும் போதிக்கப்படவில்லையென்றும், அதனால் தேசமுன்னேற்றம் தடைபடுகின்றதென்றும் பெரியோர்கள் ஓயாது சொல்லியும், சொல்லிக்கொண்டும் வருகிறார்கள். ஆனால் இப்பெரியோர்களில் அநேகமாக எல்லாரும் நகரவாசிகளென்றும் நாட்டுப்புறவாழ்க்கையில் தினப்பிரதியாக நிகழும் சம்பவங்களை போதிய அளவு அறிந்துகொள்ள அவர்களுக்கு மார்க்கமில்லையென்றும் சொல்லுவது மிகையாகாது. நாட்டுப்புற வாழ்க்கையில் நிகழும் சங்கடங்களை உள்ளபடி அவர்கள் உணர்ந்திருப்பின், அவர்களுடைய தொழில் இன்னும் வேறுவிதமாகவிருந்திருக்கும்.

கல்வியின்மை காரணமாக சாதாரண ஜனங்கள் தங்கள் கிராம உத்தியோகஸ்தர்கள் ஆக்க, அழிக்க, காக்க, வல்ல எல்லா அதிகாரங்களும் அவர்கள் கவர்ன்மெண்டாரிடமிருந்து அடைந்திருக்கிறதாக நம்பி ஏமாந்து தங்களாகத் தங்களுடைய அழிவுக்கு குழி தோண்டிக்கொண்டிருக்கும் அறியாமை காரணமாகவந்த ஆபத்துகளையாவது பார்த்து ஒருவாறு சகித்துக்கொண்டிருக்கலாம். ஆனால், கல்வி யறிவில்லாத குக்கிராமங்களே செந்நெல் விளையும் நஞ்சைப்பூமியாகவும் அதில் வசிக்கும் பாமர ஜனங்களை நெல்பயிராகவும் அவர்களுடைய அறியாமையே நெல்கதிராகவும்கருதி, அவர்கள் செய்யாத குற்றத்தை அதாவது, பக்கத்து வீட்டுக்காரன் பெண்சாதியும் புருஷனுடன் சண்டையிட்டுக்கொண்டு தனக்கும் பக்கத்து வீட்டுக்காரன் வீட்டுக்கும் மத்தியிலுள்ள வேலியில் இருக்கப்பட்ட ஒரு மரக்கிளையில் சுறுக்குப் போட்டுக்கொண்டு இறந்து விட்டது போன்ற பல குற்றங்கள் நிகழும் போதெல்லாம் அவன் பக்கத்து வீட்டுக்காரனாக ஏற்பட்ட தோஷகாரணமாக பல பொய்க்குற்றங்களை அவர்களின் பேரில் சுமத்தி பயமுறுத்திப் பணம் பறிக்க முயலும் இடை (பகல்) க்கொள்ளைக்காரர் செயலைக்கண்ணுறும் சுத்தமான இந்திய ரத்தம் ஓடும் எந்த இந்தியனும் சகிக்க முடியாது. இம்மாதிரி செய்கைகள் இன்னும் நடக்கிறதாவென்று பட்டணவாசி ஆச்சரியமடையலாம். ஆனால் நாட்டுப்புறவாசிகளுக்கு இவைபோன்ற இன்னும் பல கொடுமைகள் சாதாரணமாகப்போய் விட்டது. உதாரணமாக இங்கு ஒரு இடத்தில் சமீபத்தில் நடந்த விஷயத்தை மட்டும் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

அதாவது, பக்கத்து ஊரில் ஒரு தோட்டத்துப்பட்டியிலிருந்த இரண்டு ஆடுகள் திருட்டுப்போய் விட்டது. (கிராமங்களில் திருட்டுப்போகாமல் காத்துக்கொள்ளுவதற்கென்றும் ஒருசமயம் திருட்டுப்போய்விட்டால் நஷ்டமடைந்து விட்டவனுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்கென்றும் இவ்வேலைகளைச்செய்வதற்காக அவனுக்கு களத்திற்கு ஒருவள்ளம் தானியம் விதம் வருஷத்திற்கு மூன்று போகத்திற்கும் மூன்றுவள்ளம் சம்பாவனை கொடுப்பது என்ற திட்டத்துடன் அந்தவேலைகளைச் செய்வதற்கு ஒருவனை ஏற்படுத்திக் கிராமகாரியங்கள் நடந்துவருகிறது. இதுவெகுகாலத்திய வழக்கம். (இவனைத்தான் ஊர்க்காவலாளி, என்றழைப்பது) அதன்மேல் அவ்வூர்க்காவலாளனை ஜனங்கள் கூப்பிட்டு விசாரிக்கவும் அவன் திருட்டுப்போன ஆடுகளுக்குப் பதிலாக வேறு ஆடுகள் வாங்கிக்கொடுத்துவிடுவதாக, ஒப்புக்கொண்டு பிறகு கொஞ்சநாள் பொறுத்து பக்கத்து ஊரில் போய் வேறு இரண்டு ஆடுகளைத்திருடிக்கொண்டு ஊர்க்கவுண்டரிடம் வந்து தான் (காவல்காரன்) திருட்டுப்போன ஆடுகளுக்குப்பதிலாக வேறு இரண்டு ஆடுகள் விலைக்கு வாங்கிக்கொண்டு வந்திருப்பதாகச் சொல்ல அவர்கள் பறிகொடுத்த அந்த குடியானவனுக்கு அதை ஒப்புவித்து விட்டார்கள். அந்தக் குடியானவனும் சந்தேகமில்லாதபடியால் தன்பட்டியிலேயே அவற்றை வளர்த்து வந்தான். இது இப்படி இருக்க, மேலே வேறுஊரில் போய்த்திருடி வந்ததாக சொன்னோமல்லவா? அந்த ஊர்க்காரன் தன்பட்டியில் திருட்டுப்போய்விட்ட தன்னுடைய ஆடுகளைப்பற்றித் துப்புவிசாரிக்கவும் இந்த ஆடுகளிருக்கும் இடம் முதலியவைகள் விவரமாகத் தெரிந்தது. உடனே இப்போது தன் ஆடுகளிருக்கும் கிராமத்து மணியகாரனுக்குத் தெரிவித்துவிட்டுத்தானும் தன் சிநேகிதர்களான வேறு கிராமத்துக்காரர்களிரண்டு பேரும் திருட்டுச் சொத்திருக்கும் இடத்திற்குவந்து சேர்ந்தனர். பிறகு ஆடுகளிரண்டையும், அடையாளம் கண்டு பிடித்துக்கொண்டு அவையிரண்டும் தன்னுடைய பட்டியிலிருந்து திருடிக்கொண்டு வரப்பட்டவைகள் என்பதாகச்சொல்லவே இப்போது அவற்றை வளர்க்கும் குடியானவனும் அவையிரண்டும் தனக்குவந்து சேர்ந்த விவரத்தை உள்ளதை உள்ளவாறு கள்ளங்கபடின்றி சொன்னதுடன், அவைகள் திருட்டு சொத்தாயிருந்தால் அவர்களிஷ்டம்போல் செய்வதில் தனக்காட்சேபனையில்லையென்றும் சொல்லவும், பிறகு, போலீசுக்கு ரிப்போர்ட்டு பண்ணவேண்டுமென்ற பிரச்சினை வந்தது. அக்கிராமத்து மணியகாரர் ரஜாவில் போய்விட்டதால் பதில் வேலைபார்க்கும் அவருடைய மகன் அவ்விடத்துக்குப் போயிருந்தான். அக்குட்டி மணியகாரன் சிறுவயதுள்ள அநுபவமில்லாத வாலிபனானகையால் தன் பக்கத்திலிருக்கும் வேறு கர்ணம் (கணக்குப்பிள்ளை) ஒருவரை யோசனை கேட்டான். இவரோ மிகவும் பழமையான புலி. இப்புலிக்கு ஏற்கனவே ஆகாத இரண்டு பேர்கள் இவ்வூரில் உண்டு, மேலும் இது கேவலம் தன்னுடைய ஐந்தாவது வயதில் பள்ளிக்கூடத்தில் தன்னுடன் பென்சலுக்காக சண்டையிட்டுக்கொண்ட ஒருவனுடைய குற்றத்தையும் தனது அறுபதாவது வயதிலும் கூட மறந்து விடாமல் மனதில் வைத்துக்கொண்டிருக்கக்கூடிய அவ்வளவு கொடிய சுபாவமுடையதாகையால், இம்மாதிரி சந்தர்ப்பங்களில் அவனுடைய பெயரையும் சேர்த்துரிப்போர்ட்டில் எழுதி ஆபத்தில் மாட்டி வைத்து விட்டு அவ்விதம் மாட்டி வைக்கப்பட்டவன் சொத்துள்ளவனாயிருந்தால், அவனுக்கும் சிநேகிதன்போல் நடித்துத் தப்புவிப்பதற்காக அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்க வேண்டும் என்றும், அல்லது நல்ல வக்கீல் வைக்கவேண்டுமென்றும் சொல்லி, வக்கீலுக்குக் கொடுக்க வேண்டிய நியாயமான தொகைக்குப் பல மடங்கு அதிகமான தொகைகளைப் பறிப்பதும் போன்ற இன்னும் பல பித்தலாட்டங்களைச் சொல்லி, பிறர் பொருளை கொள்ளை கொள்ளுவதில், யாரும் தனக்கு நிகரில்லையென விளங்கும் புலியானகையால், உடனே தனக்காகாத மேல் சொன்னவர்களையெல்லாம் இதில் மாட்டிவைத்து தன்னுடைய பழைய பழியையெல்லாம் ஒருமிக்க வாங்கிவிட எண்ணங்கொண்டதால், அப் பன்னிரண்டு நபர்களின் பேரிலும் ரிப்போர்ட்டு செய்ய வேண்டுமென்று சொல்லிற்று. ஆனால், உண்மையோ வேறு விதமாயிருக்கிறது, பாவம், புதிய மணியகாரனுக்கு இவர்களுடைய வார்த்தையையும், தட்ட முடியவில்லை; உண்மைக்கு மாறாக நடக்கவும் மனம் துணியவில்லை. இந்த நிலைமையில் இண்டமுள்ளில் (புஞ்சைக் காடுகளிலுள்ள ஒரு வித முள் புதர்) அகப்பட்ட பூனைபோல் முன் பின் நகரமுடியாமல்-இன்னது செய்வதென்று தோன்றாமல்-விழித்துக் கொண்டிருக்கும் சமயத்தில், தெய்வச் செயலாய் அவனுடைய சிநேகிதர் ஒருவர் தற்செயலாக அவ்விடம் வரவும், அச் சிறுவன் உடனே அவருடைய ஆலோசனையைக் கேட்டான். அவர், உண்மை என்னவென்று கேட்கவும் சிறுவன் உண்மையைச் சொன்ன பிறகு, அவர் இம்மாதிரி சந்தர்ப்பங்களில் மணியகாரனாக இருக்கப் பட்டவன் உண்மையான வழியிலேயே போக வேண்டியதென்றும், உண்மையை அனுசரித்தே போகும்படி சிறுவனுக்குச் சொல்ல, அவன் அந்த ஆடுகளிரண்டையும் கடைசியாக வளர்த்துக்கொண்டிருந்த ஒருவன் பேரில்மட்டும், ரிப்போர்ட்டு எழுதி அனுப்பி விட்டான். ஆ தெய்வமே உமது கருணையே கருணை! நல்ல சமயத்தில் வாயில்லாப் பூச்சிகளாகிய ஏழைகளைக் காக்க முன் வந்தாய்! இச்சமயம் உமது திருவுளம் வேறு பக்கம் சென்றிருந்தால் அப் பெரிய புலி அவ்வூரிலுள்ள தனக்காகாத பன்னிரண்டு பேரையும் மாட்டிவைத்து அந்த ஊரையே சூறையாடியிருக்கும். இது பஞ்ச காலமானதால் தாராளமாக சூறையாட மார்க்கமின்றி அது ரொம்பவும் பசியோடிருக்கிறது போலும். அப் புலியின் பசிக் கொடுமையினின்றும், கல்வியறிவில்லாத ஏழைகளைக் காப்பாற்ற வேண்டுமானாலும், இம்மாதிரியான கொடுமைகள் நாட்டுப் புறத்தில் நிகழாது ஒழிய வேண்டுமானாலும், உடனே ஐந்நூறு ஜனங்கள் கொண்ட ஒவ்வொரு குக்கிராமத்துக்கும் ஒவ்வொரு பள்ளிக்கூடம் அமைக்க வேண்டும். அவற்றிற்குத் தாராளமாக திரவிய சகாயம் செய்ய கவர்ன்மெண்டார் முன் வர வேண்டும். இல்லாவிட்டால், நான்கு கால் ஜந்துக்களையெல்லாம் ஊர்க்காவலன் போன்ற ஏழைப் புலிகள் சாப்பிடவும் கல்வியில்லாததால் வாயில்லாப் பூச்சி

களாகிய நாட்டுப் புற வாசிகளாகிய இந்த இரண்டு கால் செம்மறியாடுகள் எனத்தகும் இச்செம்மறியாடுகளையெல்லாம், மேற்சொன்ன கிராமாதிகாரி போன்ற புலிகள் சூறையாடி விடாதபடி கல்வியென்ற பெரிய மதிலைக் கொண்டு காப்பாற்றுவார்களாக. பிராணாதாரமாகிய இக்காரியத்தைச் செய்யாத எந்தக் கவர்ன்மெண்டையும் ஜனங்கள் போற்ற மாட்டார்கள் என்பது திண்ணம். ஆகையால் தங்களை நல்ல கவர்ன்மெண்டார் என்று பாமர ஜனங்கள் நம்பவேண்டுமானால் உடனே கட்டாயப் படிப்பு மசோதாவை சட்டமாகச் செய்து அக்கல்விக்கு தேசிய கல்வித் திட்டத்தை அமைத்து கிராமாந்திரங்களில் அவற்றை அனுஷ்டானத்திற்கு கொண்டு வருவது தான் சரியான மார்க்கமும் அவசியமும் ஆகும்.

(9-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

இந்துக்களும், முகம்மதியர்களுமாயுள்ள பிராமணரல்லாதார் தேசிய வளர்ச்சிக்கு, இந்து-முஸ்லீம் ஒற்றுமை அவசியமென்பதை உணரவேண்டுமென்றும், இதை நிலைநாட்ட யாவரும் தக்க கொள்கைகளை அநுஷ்டிக்க வேண்டுமென்றும், இக்காங்கிரஸ் அபிப்ராயப் படுகிறது.

(9) தேசத்தைக் காக்க இந்தியப்படையொன்று அமைக்க வேண்டிய முயற்சிகளையும் செய்யப் படவேண்டுமென்றும், சைனியப் பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் போதியபடி ஏற்படுத்த வேண்டுமென்றும் இக்காங்கிரஸ் தீர்மானிக்கிறது.

(10) இந்து மததர்ம பரிபாலன சட்டத்தை நிறைவேற்றியதற்காக, கனம் பனகால் இராஜாவைப் பாராட்டுவதுடன், மற்றமாகாணங்களும் இம்மாதிரிச் சட்டங்களை செய்ய வேண்டுமென்று இக்காங்கிரஸ் அபிப்பிராயப்படுகிறது. பின்னர், வகுப்பு வாரி பிரதிநிதித்வம், கைத் தொழில் கைராட்டினம் முதலியவைகளை, விருத்தி செய்தல் தீண்டாமையை ஒழித்தல் முதலியவைகளைப் பற்றிப் பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

முஸ்லீம் மகாநாடு

அகில இந்திய முஸ்லீம் லீக்கின் 17-வது வருஷத்திய கூட்டம் அலிகாரில் சென்ற டிசம்பர் மாதம் 30-ந்தேதியன்று ஸர். அப்துல் ரஹீமின் தலைமையின் கீழ் கூடிற்று. இவர் செய்த பிரசங்கச் சுருக்கம் வருமாறு: இப்பொழுது இந்திய முஸ்லீம்கள் தங்களது வகுப்பார் விஷயமாகக் கொண்டிருக்கும் முறை சரியானதே. இந்துக்களில் சிலர் இஸ்லாம் மதத்திற்கு விரோதமாக இயக்கம் தொடுத்திருக்கின்றனர். இந்த இயக்கம் மகமதியர்களின் அரசியல் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும். எனவே, வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவம் முஸ்லீம்களுக்கு அளித்தல் அவசியமேயாகும், அப்பொழுது தான் அவர்களது உரிமை கெடாதிருக்கும். மேலும், இந்திய முஸ்லீம்கள் சட்டசபைகளில் முஸ்லீம் கட்சி யொன்றை ஸ்தாபித்து வேலை செய்யவேண்டும். இதை உடனே முஸ்லீம்கள் கவனித்தல் வேண்டும். கவனியாதிருப்பின் முஸ்லீம் வகுப்பினர் கீழ்விழ வேண்டிவரும். மற்றும், எல்லா வகுப்பினரையும் கொண்ட ஒரு கமிட்டியை ஸ்தாபித்து மாகாண அரசாங்கங்களை ஜனப்பொறுப்பு உள்ளதாகச்செய்ய முயற்சி எடுக்கவேண்டும்.

பிறகு, சுத்தி, சங்கதன் என்னும் இயக்கத்தை ஒட்டிக் கூறியதாவது:—

சுத்தி இயக்கம் முஸ்லீம்களுக்கு விரோதமானதாகும் சிரத்தானந்தசுவாமியும், லாலாலஜபதிராயும், இந்த இயக்கத்தைப் பலமாக நடத்தி வருகின்றனர். சில இந்துத்தலைவர்களும், ஸ்பெயின் நாட்டார் மூர் வகுப்பாரைத் துறத்தியதுபோல், முஸ்லீம்களை ஓட்டிவிடவேண்டும் என்றும் கூறியுள்ளார்கள். இது முடியாத காரியமாகும். இந்துக்கள் கெட்டிக்காரர்கள், தங்கள் இஷ்டப்படி நடக்காதவர்களை அமுக்கி விடுவார்கள் எனவே, இந்துக்களை நாம் நம்பமுடியாது. இந்தியா இந்துக்களுக்குச் சொந்தமானது என்று கூறுதலை நாம் திடமாய் மறுக்கவேண்டும்.

அகில இந்திய கிறிஸ்தவர் மகாநாடு

அகில இந்தியக்கிருஸ்தவர்களின் மகாநாடு சென்ற டிசம்பர் மாதம் 28-ந்தேதி கல்கத்தாவில் நடைபெற்றது. அதில் தலைவர்கள் பேசிய பேச்சின் அபிப்பிராய சுருக்கம் வருமாறு:—

அரசியலில் சீர்திருத்தங்கள் சம்பந்தமாகக் கிறிஸ்தவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதை விஸ்தாரமாக கூறிவிட்டு, சுயராஜ்யம் பெறுவதே தங்கள் லக்ஷியமென்றும், சொல்லி சுயராஜ்பக்கட்சியினரின் வேலைமுறையை வன்மையாகக்கண்டித்தார்கள். மேலும், சுயராஜ்யக்கட்சியினர் சிறிதுகாலமாவது ஒரே விதமாக நடத்து கொள்ளவில்லையென்றும், அவர்கள் சுயராஜ்யமடையப் போவதாகக் கருதி அதில் மிதமிஞ்சி உற்சாகம் கொண்டுவிட்டதால், ஒரே நிலைமையிலிருக்க முடியாமல் தத்தளிக்கின்றார்களென்றும், சுயராஜ்பக்கட்சியார் ஜனங்களின் நம்பிக்கையைப் பெற்றபோதிலும், அவர்கள் எதுவும் சாதித்து விடவில்லையென்றும் கூறினார்கள். மற்றும், இம்மகாநாட்டில் மதுபானத்தை இன்னும் 5 வருடகாலத்திற்குள் அடியோடு நிறுத்தி விடவேண்டுமென்றும் பூர்ண மாகாண சுயாட்சி உடனே அளிப்பதுடன், மத்திய அரசாங்கத்திலும்பொறுப்பு அளிக்கவேண்டுமென்றும், தென்னாப்பிரிக்கா இந்தியருக்குப்பரிவு காட்டியும், பல தீர்மானங்களை நிறைவேற்றின.

மிதவாதிகள் மகாநாடு.

இந்திய மிதவாதிகள் மகாநாடு சென்ற டிசம்பர் மாதம் 30-ந்தேதியன்று கல்கத்தாவில் நடைபெற்றது. ஸ்ரீமான். ஜோஷி அவர்கள் அக்ராசனம் வகித்தார். இம்மகாநாட்டில், ராணுவத்தை இந்தியர் மயமாக்க வேண்டுமென்றும், ஸிவில்சர்விஸ் சட்டத்தைப் பார்லிமெண்டு நிறைவேற்றியதைக் கண்டித்தும், தென் ஆப்பிரிக்கா ஆசியாக்காரர் தடைமசோதாவைக்கண்டித்தும், பொருளாதார அபிவிருத்தியை வற்புறுத்தியும், எங்கும் கட்டாயப்படிப்பு ஆரம்பிக்கப்படவேண்டுமென்றும், தொழிலாளர் விஷயமாக சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் பர்மா அடக்குமுறைச்சட்டத்தைக்கண்டித்தும் தீர்மானங்கள் நிறவேற்றப்பட்டன.

செங்குந்தர் மகாநாடு

அவிநாசியில் 27, 28-12-25 தேதி ஞாயிறு திங்கள்தினங்களில் திருவெண்ணைநல்லூர் ஸ்ரீமான். வடிவேலுமுதலியார் அக்கிராசனத்தின்கீழ் கூடிற்று,

ஸ்ரீமான். திரு. வி. கலியாண சுந்தரமுதலியார் K. S. இராமசாமி கவுண்டர் K. R. ஈஸ்வரமூர்த்திக்கவுண்டர் சொக்கலிங்கம்பிள்ளை வெங்கிட்டப்பகவுண்டர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் கருணாலய சுவாமிகள் முதலியோரும் பாப்பாரப்பட்டி சின்னமுத்து முதலியார் சென்னிமலை கிருஷ்ண முதலியார் சென்னிமலை சேர்மென் ராமசாமி முதலியார் கோவை C, P. சுப்பய்ய முதலியார் C. V. ராமசாமி முதலியார் N. லக்ஷிமண முதலியார் பெருந்துறை E. T. சீனிவாச முதலியார் S. A. கணேச முதலியார் சீதப்ப முதலியார் முதலிய சுமார் 200 பிரதிநிதிகளும் ஆஜராயிருந்தார்கள். உபசரணை தலைவர் ஸ்ரீமான். S. வையாபுரி முதலியார் கூட்ட ஆரம்பத்தில் சபையோரை வரவேற்று உபசரிப்பு கூறியபின் அக்கிராசனர் முகவுரைப் பிரசங்கம் நடந்ததும் ஸ்ரீமான்கள். திரு. வி. கலியாண சுந்திரமுதலியார் கருணாலய சுவாமிகள், கந்தசாமி ஓதுவார் நமசிவாயமுதலியார் ஆகியவர்கள் முறையே, செங்குந்தரும் முருகனும், சைவ சமயமாண்பு, வீரவாகுதேவர் பெருமை ராமாயணத்தில் நகர்நீங்குபடலம் ஆகியவற்றைப் பற்றி பேசினார்கள் பின்பு தங்கள் குலத்தைப் பற்றி மகாத்மாவின் உபதேசத்திற்கும், ஸ்ரீமான் N. லக்ஷ்மண முதலியார் மூலம் அளித்த நன்கொடைக்கும் நன்றி செலுத்தியும், பெண்கள் கோவிலுக்காக பொட்டுக்கட்டக் கூடாது என்றும், கோவில்களிலும் மடங்களிலும் தேவதாசிகள் உபசாரம் என்பது எடுபடவேண்டுமென்றும், பரம்பரை மானிய பாத்தியம் பெற்ற கோவில் தாசிகளுக்கு ஏதாவது உபகார சன்மானம் கொடுத்து அவர்களை நிறுத்திவிட வேண்டுமென்றும் இவ்வகையில் மீதியாகும் பொருளை இக்குல முன்னேற்றத்திற்கு உபயோகிக்க வேண்டும் என்றும், சர்க்கார் வைபவங்களிலும், சர்க்கார் அதிகாரிகளுக்கு பொது ஜனங்கள் செய்யும் வைபவங்களிலும், தாசிகளையும் விபசாரப் பெண்களையும் உபயோகப் படுத்தக் கூடாதென்றும், மகா நாட்டு கட்டுப்பாட்டை மீறினவர்களுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளக்கூடாதென்றும் பெண்களைத் துர் விநியோகத்திற்கு உபயோகப் படுத்தும் ஆண் மக்களை கண்டிப்பதாகவும், மகா நாட்டு கட்டுப்பாட்டிற்கு எல்லோரும் கையெழுத்து செய்ய வேண்டுமென்றும், சங்க திட்டங்களையும், முன்னேற்றங்களை பற்றி சரியானபடி பிரசாரம் செயவேண்டும் என்றும், சங்கத்திற்கு மூலதனம் சேர்க்கவேண்டும் என்றும், ஆகிய பல தீர்மானங்கள், நிறைவேற்றப்பட்டு அடுத்த வருஷத்திற்கு ஸ்ரீ கிருஷ்ணப்ப முதலியார், தலைவராகவும் ஸ்ரீலக்ஷிமண முதலியார் காரியதரிசியாகவும், தேர்ந்தெடுக்கப் பட்டவுடன், கோவை ஸ்ரீமான். B. V. சாமியவர்களால் போட்டோ படமும் எடுக்கப்பட்டது. கடைசியாக ஈரோடு ஸ்ரீமான் E. V. ராமசாமி நாயக்கரால் நமது சமூக முன்னேற்றத்தைப்பற்றி ஒரு உபன்னியாசம் செய்யப்பட்டது

வந்தேமாதரம்.

கரூர் சுயம் கத்தர் ஜவுளிகள்.

தமிழ் நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளை பீஸ்கள், ஷர்டிங், கோட்டிங், சால்வைதினுசுகள் கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும். தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்

S. ராமசாமி அய்யர்,
ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர்ஸ் கரூர்.

அத்தாட்சிப்பத்திரம்

(தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ். ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால் கைத்தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்,
காரியதரிசிகத்தர், இலாகா.

உண்மையான கதர். கெட்டியான கதர்.

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும், மேற்பார்வையாலும், அத்தாட்சிப் பத்திரத்துடனும் நடை பெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்

ஸ்ரீகாந்தி கதராலயத்தார் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

வா. மு. தங்கப்பெருமாள்,
காங்கிரஸ்கதர் போர்டு காரியதரிசி.

ந. ராமசாமி
மானேஜர், ஸ்ரீகாந்தி கதராலயம்,
திருப்பூர்

ஓர் மஹானின் மகிமை.

"அருமையான மூலிகையும் ரகசியமும்."
குஷ்டம், க்ஷயம், முதல் சகலவித வியாதிகளும், செய்வினைகளும் நீங்கியும், புத்திர பாக்கியம் உண்டாகியும் அபாரமான எக்காரியங்களும் கோரியபடி முடிந்தும், ஏராளமான நற்சாக்ஷிகளும் சங்கத்தில் தங்கமெடலும் பெற்றவை.

எதற்காக தேவையானாலும் பதிலுக்கு ஸ்டாம்பு வைத்து கோயமுத்தூர் ஜில்லா பேட்டைப்பாளையம் பாலச்சந்திரன் ஆபீஸ் தலைவர், ஸ்ரீமான். எஸ். ஏ. கே. பிள்ளையவர்களுக் குவிபரமாக எழுதிக் கொள்வீர்களானால் சகலவிபரமும் புஸ்தகமும் கிடைக்கும்.

வைத்திய சந்திரிகை.

வைத்திய சாஸ்த்திரத்தின் தத்துவத்தை எடுத்துச்சொல்லும் அருமையான மாதசஞ்சிகை. பத்திராதிபர் மதுரை பண்டிதர் S. நாராயண அய்யங்கார். பல வைத்திய நிபுணர்களால் எழுதப்படும் வைத்திய வியாசங்களும் மலிந்திருக்கும்.

வருடசந்தா ரூ. 2—0—0
வெளிநாட்டுக்கு ரூ, 3—0—0

மானேஜர், வைத்திய சந்திரிகை, கரூர்.

"தேசோபகாரி"

பர்மாவில் விடுதலை முழக்கஞ் செய்துவரும் ஓர் தமிழ் வாரபபதிப்பு.

வருஷ சந்தா ரூபாய் ஐந்து.

மானேஜர்:— "தேசோபகாரி" லிமிடெட்,
45-36வது வீதி ரங்கூன்.

"தேசபக்தன்"

ஓர் தேசீயத்தமிழ் பத்திரிகை.

பிரதி திங்கள், புதன், வெள்ளிதோறும் வெளிவருவது. விளம்பரத்திற் கேற்றது.

வருடசந்தா ரூபாய் 13.
வெளிநாடுகளுக்கு ரூபாய் 16.

காரியஸ்தர்,
"தேசபக்தன்" கொழும்பு.

"தெய்வீகன்."

பார்க்கவகுல முன்னேற்றத்தை நாடி யுழைக்கும் ஓர் மாத சஞ்சிகை.

பார்க்கவர்கட்கு வருட சந்தா ரூ. 2-0-0
ஏனையோர்கட்கு வருட சந்தா ரூ. 1-8-0

காரியஸ்தர். "தெய்வீகன்"
பொன்மலை, திருச்சி.

நவ இந்தியா.

தேசமுன்னேற்றத்துக்கென உழைக்கும் ஓர் வாரப்பத்திரிகை. ஆசிரியர். ஸ்ரீமான். டி. எஸ். தியாகராஜ ஞானியார்.

வருட சந்தா ரூ. 5.

மானேஜர், நவ இந்தியா,
திருவாரூர், S. I Ry.

வெள்ளியை கொடுத்து தங்கத்தைப் பெறுங்கள்.
வந்தாலும் போனாலும் சரி என்ற லாட்டரி இல்லை.
கைமேல் பலன் கிடைக்கும்
இது ஹம்பக்கில்லை.
பட்ட பகல் போல் வெட்ட வெளிச்சமானது
ஒரு ரூபாய் வெள்ளி நாணயமாகக் கொடுத்தால் 32

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

பெறலாம்.

அதனை உபயோகித்தவர்கள் அது "தங்கத்திற்குச் சமமான நிறையுள்ளதென்று" கூறியிருக்கின்றனர். மனத்திலும், தேகத்திலுமுள்ள கோளாறுகளைப் போக்கடித்துப் பலஹீனம் அஜீரணம் முதலிய வியாதிகளை நாஸ்தமாக கண்டிக்கின்றது.

விபரம் வேண்டுவோர் இன்றே இணைய ஜாப்தாவுக்கு எழுதுங்கள்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே மதராஸ்.

டைமண்ட் பிரஸ், ஈரோடு

எங்கள் அச்சாபீசில் தமிழ், இங்கிலீஷ் பாஷைகளில் சேர்த்தியான கலர் வேலைகள் அவரவர் இஷ்டப்படி குறைந்த சார்ஜுக்கு குறித்த காலத்தில் அச்சடித்துக் கொடுக்கப்படும்.

போட்டோ படங்கள்.

எங்கள் ஆபீசில் தற்கால நாகரீகத்திற்கேற்றவாறு உயர்தர கலர் போட்டோ படங்கள் பிடிக்கப்படும்.

K. N. பெரியசாமி நாயுடு,
புரோப்ரைட்டர்.

முக்கிய கவனிப்பு.

18 காரட்டு ரோல்டு கோல்டு பிளேட் கேஸ் ரிஸ்லெட் கெடியாரங்கள்.

குடி அரசு சந்தாதாரர்களுக்கு மாத்திரம் இக்குறைந்த விலையும், உயர்ந்த பவுன்டன் பேனாவும், புதிய 1926 வருஷத்திய அழகிய காலண்டரும் ஆர்டருக்கு இனாமாகப் பார்சலுடன் அனுப்பப்படும். சீக்கிரம் முந்துங்கள். இது நன்றாய் உழைக்கக் கூடியது சரியான காலங்காட்டக்கூடியது. இதுபோன்ற கெடியாரங்கள் இனி வாய்ப்பதரிது. குறைந்தவிலையுள்ளது! சீக்கிரம் முந்துங்கள்!

நெ. 1, 22 காரட்டு ரோள்ட்கோள்ட் பிளேட் 5-வருஷ காரண்டியுள்ள ரிஸ்லெட் கெடியாரம் 12—0—0
நெ. 2 பொன் கில்ட் ரிஸ்லெட் கெடியாரம் தோல்பட்டையுடன் விலை 7—0—0
நெ. 3 22 காரட்டு ரோள்ட் கோள்ட் 5-வருஷ காரண்டி 15 கெம்புகள் செறுக்கிய லீவர் பாக்கட் கெடியாரம் உயர்ந்த சங்கிலியுடன் விலை ரூ. 15—0—0

விலாசம்:— நயாகரா வாட்ச் கம்பெனி தபால்பெட்டி நெ. 130, மதராஸ்

ஈரோடு டைமண்ட் பிரஸில் அச்சிடப்பெற்று ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.